மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2024 ஏப்ரல் 1-15 தொகுதி 22 இதழ் 15 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200

# சர்வாதிகார புல்டோசர் மோடி ஆட்சியைத் தோற்கடிப்போம்!



## சிபிஐ எம் எல் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணி தமிழ்நாட்டில் போட்டியிடும் கட்சிகள்

- திராவிட முன்னேற்றக் கழகம்
- விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
- இந்திய தேசிய காங்கிரஸ்
- மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம்
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
- இந்திய யூனியன் முஸ்லீம் லீக்
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
- கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி



திண்டுக்கல் சிபிஐஎம் வேட்பாளர் சச்சிதானந்தன்



கரூர் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதி மணி

**இந்தியா கூட்டணியின் தமிழக வேட்பாளர்களுடன் மாநில செயலாளர் பழ. ஆசைதம்பி**



திருவள்ளூர் காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் செந்தில்



திருச்சி மதிமுக வேட்பாளர் துரை வைகோ

மாலை தீப்பொறி

இருவார இதழ்

2024 ஏப்ரல் 1 - 15

தொகுதி 22 இதழ் 15

முதன்மை ஆசிரியர்

சங்கர் .வீ

ஆசிரியர்

ஜி. ரமேஷ்

ஆசிரியர்குழு

பாலசுந்தரம்

பழ. ஆசைத்தம்பி

அ. சந்திரமோகன்

கே. ஜி. தேசிகன்

மேலாளர்

சொ. இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

**தலையங்கம்**

# இனியும் தொடரக்கூடாது இந்த மோ(ச)டி ஆட்சி

மக்களைவைத் தேர்தல் 2024 அறிவிக்கப்பட்ட பின்னர், பாஜகவின் வானதி சீனிவாசன் வெளியிட்ட அறிக்கையில், 2019 தேர்தலில் 300க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று மோடி சொன்னார். வெற்றி பெற்றோம், இப்போது 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என மோடி கூறியிருக்கிறார். அது நடக்கும். ஆகவே, இது முடிவு அறிவிக்கப்பட்டபின் நடக்கும் தேர்தல் என்கிறார். பாசிச சங்கிகள் எதையும் செய்வார்கள் என்பதை இப்போது நடக்கின்ற சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத் துறை கைது செய்துள்ளது. அடுத்து, வரி பாக்கி என ரூ.1823 கோடி அபராதமாகக் கட்ட வேண்டும் என்றும் காங்கிரஸ் கட்சிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது, ஏற்கனவே காங்கிரஸின் வங்கிக் கணக்கை முடக்கி ரூ.135 கோடியைப் பறிமுதல் செய்துள்ளது, வருமான வரித்துறை. வருமான வரித்துறை விதி மீறல்களுக்கு விதிக்கும் அபராதத்தின்படி ரூ.4600 கோடி பாஜகதான் கட்ட வேண்டும் என்கிறது காங்கிரஸ்.

கோவையில் பாஜக வேட்பாளர் அண்ணாமலையின் உறுதிமொழிப் படிவம் முறையாகத் தாக்கல் செய்யப்படாததால் அவருடைய வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள் எதிர்க்கட்சியினர். ஆனால், அண்ணாமலையின் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. இந்தியா கூட்டணி, எதிர்க்கட்சிகளின் சின்னங்களை முடக்கும் வேலையும் நடந்தது. வாக்கு எந்திரத்தின் நம்பகத் தன்மை பற்றி விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. தேர்தல் சமயத்தில் மத்திய தேர்தல் ஆணையர் ஒருவர் பதவி விலகுகிறார். மறுநாளே, பிரதமர் மோடி புதிதாக இரண்டு தேர்தல் ஆணையர்களை நியமிக்க, தொடர்ந்து தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படுகின்றன. தேர்தல் ஆணையம் யாருக்காகச் செயல்படும்?

மோடி அரசு, நீதி நெறிமுறைகள், ஜனநாயகம் பற்றி கொஞ்சமும் கவலைப்படாது என்பதற்கு சமீபத்திய அதிர்ச்சி செய்தி. குடியுரிமைச் சட்டத்தின் படி இந்தியாவில் குடியுரிமை கோருபவர்களுக்கு உள்ளூர் கோவில் பூசாரி அல்லது அர்ச்சகரிடம் சான்றிதழ் பெற வேண்டும் என்கிறது. இது சட்ட அதிகார அமுலாக்கக் கட்டமைப்புக்குள் பூசாரிகளைக் கொண்டுவருவதாகும். அத்தகைய ஏற்பாடு சட்டத்தையே இந்துத்துவமயமாக்குவது மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டத்துக்கே எதிரானதாகும். இந்துக் கோவில்களை, பூசாரிகளை அதிகார மையங்களாக மாற்றும் முயற்சி. இது இஸ்லாமிய மக்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, மதச்சார்பின்மையின் மீதான தாக்குதலாகும். நாளை கடவுள் மறுப்பாளர்களும் பகுத்தறிவாளர்களும் இந்தப் பூசாரிகளிடம் சான்றிதழ் வாங்க வேண்டும் என்றால் நிலைமை என்னவாகும்?

“நாட்டு மக்களுக்கும் மத்தியில் ஆளும் பாஜகவுக்கும் இடையே மோதலாகவே தேர்தல் பத்திர ஊழல் உருவெடுத்திருக்கிறது. இதற்காக மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கு மக்கள் மிக கடுமையான தண்டனையைத்தான் தரப் போகின்றனர்.” என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும் பொருளாதார வல்லுநருமான பரகலா பிரபாகர் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகத்திலேயே மிகப் பெரிய ஊழலான தேர்தல் பத்திர ஊழலை மறைக்க, எதிர்ப்புக் குரல்களை ஒடுக்க எதையும் செய்யத் துணிந்துவிட்டது மோடி அரசு.

இந்தக் காவிப் பாசிச மோ(ச)டி அரசு இனியும் தொடரக் கூடாது. அதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) அங்கம் வகிக்கும் “இந்தியா“ கூட்டணிக்கு வாக்களிப்போம். இந்தியாவைக் காப்போம் ■

# பிஜேபியின் பிற்போக்கு, ஆதிக்க அரசியல்

தமிழ்நாட்டில் காலூன்றிட தன்னாலான அனைத்தையும் முயற்சித்து வருகிறது பிஜேபி.

வீரவேல் - வெற்றிவேல் யாத்திரையை முன்னிட்டு முருகன் பெயரில் அரசியல் நடத்த முயற்சித்தது. பெரிதாக எதுவும் செய்ய முடியவில்லை. கருப்பர் கூட்ட நிகழ்வை வைத்துக் கொண்டு கந்த சஷ்டி கவசத்தை அரசியலாக்க முயற்சித்தது. மதவெறியைத் தமிழ்நாட்டில் தூண்டுவதற்கான முயற்சிகள் பெருமளவில் பலனளிக்கவில்லை. சிறைகளில் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடத்தி, ரவுடிகளைக் கொண்டு, பிள்ளையார் ஊர்வலத்தை வைத்து அரசியல் நடத்த முயற்சித்தது. அது ஓரளவே சில பயன்களைப் பெற்றுத் தந்தது. வடநாட்டைப் போல பெரும் கலவரத்தை உருவாக்க முடியவில்லை. சிவராத்திரியையும் பயன்படுத்த தொடர்ந்து முயற்சித்து வருகிறது. கோவில் கமிட்டிகளைக் கைப்பற்றி, கோவில்களை தனது பரப்புரை அரசியல் மையங்களாக மாற்ற முயற்சித்ததும் உடனடியாக பெரும் பலனளிக்கவில்லை. அந்த முயற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இவை அனைத்தும் நீண்ட கால நோக்கில் ஏதாவது பலனளிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கருத்தியல் தளத்தில், பெரியார் கருத்துக்களைத் தகர்க்கும் நோக்கில், பெரியாரை அவமரியாதையாக பேசத் துவங்குவது அவர் சிலைக்குத் தார் பூசுவது, உடைப்பது போன்ற செயல்கள் எதிர்வினையை மக்கள் மத்தியில் உருவாக்கினவே தவிர எதிர்பார்த்த அளவு பெரும் பயனை அளிக்கவில்லை.

இப்போது, தமிழ் நாட்டில் திராவிட அரசியலுக்கு எதிரான, கருத்தியல், அரசியல் மாற்றணி பிஜேபிதான் என்பதைப் போல பெரிய அளவில் முன்னெடுத்து வருகிறது. திராவிட இயக்கம் என்பது பிஜேபியைப் பொறுத்தளவில் அதிமுகவையும் உள்ளடக்கியதுதான். ஆனால், அதிமுகவின் பெரும் தலைவர்களான எம் ஜி ஆர், ஜெயலலிதாவைப் புகழ்வதன் மூலம் அவர்களது அணிகளை வென்றெடுக்க முயற்சிக்கும் தந்திரத்தையும் கடைபிடிக்கிறது.

விஜயகாந்த் மறைவையொட்டி, அவரை வானளாவப் புகழ்ந்து அவரது அடித்தளத்தை வென்றெடுக்க முயற்சித்தது. குறைந்தபட்சம் தேமுதிகவோடு தேர்தல் உடன்பாடாவது காண முயற்சித்தது. அதுவும் இயலவில்லை.

நாம் தமிழரை மிரட்ட புலனாய்வு முகமையைப் பயன்படுத்திப் பார்த்தது. ஆனால், ஏனோ அதுவும் முடியவில்லை.

இதுபோல, ஒரு மாநிலத்தின் முக்கிய கட்சிகளோடு உறவாடுவது, அதன் மீது சவாரி செய்து தன் பலத்தைப் பெருக்குவது, மிரட்டுவது, அத்தோடு, தனது ஒன்றிய அதிகாரம் மற்றும் பணபலத்தைப் பயன்படுத்தி அந்தக் கட்சித் தலைவர்களைத் தன் பின்னால் இழுப்பது, அதைப் பலவீனப்படுத்துவது, உடைப்பது என நாடு முழுவதும் செய்கிறது. திடீரென தற்காலிகமாக அதிமுக சுதாரித்துக் கொண்டிருக்கிறது. அதிமுக, பிஜேபி கூட்டணியிலிருந்து விலகி இருப்பதற்கு முஸ்லீம் ஓட்டுகள் தனக்கு கிடைக்காமலே போய்விடுமோ, மாநில அரசியலில் எழ முடியாமல் போய்விடுமோ என்கிற பயமே முதன்மையானதாகத் தெரிகிறது. பிஜேபியின் இந்த ஜித்து விளையாட்டுக்கு தமிழகத்தில் பலியாகிப் போனவர்கள்தான் புதிய தமிழகமும், சரத் குமாரும். ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிமுகவும், பாமகவும் கூட அந்தப் பட்டியலில்தான் இருக்கிறது.

என் மண் - என் மக்கள் யாத்திரையைப் பல மாதங்களாக நடத்தி, தன் சொந்த செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில், இறுதியில் தனது அரசியல் கூட்டாளியான அதிமுகவையும் இழந்து விட்டது. ஆனால், பாமகவை மிரட்டியும், ஒன்றிய அமைச்சர் பதவியையும் காட்டி வளைத்துப் போட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியொரு வாய்ப்பை நாம் முற்றிலும் புறந்தள்ளிவிட முடியாது.

பல்லடத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதில் கூட்டணி கட்சித் தலைவர்களையும் வரவழைத்து, தன்னை தமிழ்நாட்டில் எழுந்துவரும் ஒரு சக்தியாக காட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால், பிஜேபியின் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அதன் சாதி அரசியலில் (சோசியல் இஞ்சினீயரிங்) காணப்படுகிறது என்று சொல்ல முடியும். மீனாட்சி

புரம் - மண்டைக்காடு கலவரங்கள் பழங்கதையாகி விட்டது என்றாலும், அதன் மூலம், ஆர் எஸ் எஸ் தமிழ்நாட்டில் வேரூன்றத் துவங்கியது. கடந்த ஆண்டு, தமிழகத்தில் மாவட்டவாரியாக பேரணிகள் நடத்தி, தமிழ்நாட்டில் தன்னை அறுதியிட்டுக் கொள்ள முயற்சித்தது. வடநாடு போல பெரிய வலைப்பின்னல் இல்லையென்றாலும் முன்னைவிட தனது வலைப்பின்னலைத் தமிழ்நாட்டில் விரிவுப்படுத்தி இருக்கிறது என சொல்ல முடியும்.

கரூர்காரர் அண்ணாமலையை மாநிலத் தலைவராக்கி, கொங்கு வேளாளர் மத்தியில் தனது செல்வாக்கைப் பெருக்க முடியும் என கருதுகிறது. தென்மாநிலத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், பிற்படுத்தப்பட்ட வணிக சமுதாய மக்கள் மத்தியில் இன்னும் கூட தனது செல்வாக்கைக் கொண்டிருக்கிறது. எல். முருகனை மாநிலத் தலைவராக்கி, பின் ஒன்றிய அமைச்சராக்கி அதன் மூலம் மேற்கு மாவட்ட அருந்ததியர் மத்தியில் காலூன்ற தொடர்ந்து முயற்சித்து வருகிறது. தென்மாவட்ட பட்டியலின மக்கள் மத்தியிலுள்ள மேல்தட்டினரை பட்டியலிலிருந்து வெளியேறும் கோரிக்கைக்கு ஆதரவாக ஓரளவு திரட்ட முடிந்துள்ளது. அதற்குப் பெருமளவு உதவியது புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும் ஜான் பாண்டியனும். தென் மாவட்ட பட்டியலின மக்களை தேவேந்திர குல வேளாளர் என பெயர் மாற்றியது. தேவேந்திரருக்கும் நரேந்திரருக்கும் (மோடி) நெருக்கமான உறவு உண்டு என சவடால் அடித்தது. ஆனால், தேவேந்திரரை பட்டியலில் இருந்து நீக்கினால் அந்தச் சமூக மக்களின் எதிர்வினையைச் சந்திக்க வேண்டியிருக்கலாம் என மதிப்பிட்டு கவனமாக அதை மட்டும் செய்யவில்லை.

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், வன்னியருக்கு10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்குவதாகக் கூறி நடந்த பெரியதொரு பித்தலாட்டத்துக்கு தனது ஆசியை வழங்கியது. அது எவ்வளவு பெரிய அண்டப்புளுகு என்பதை அதற்குப் பின்னால் நடந்த நிகழ்வுகள் தெளிவுபடுத்தி விட்டன. உச்சநீதி மன்றமும் கூட அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

அதிமுகவுடனான கடந்த கால கூட்டணியால் மேற்கு மாவட்டத்தில் ஓரளவு செல்வாக்கு பெறத் துவங்கி இருக்கிறது எனலாம். அதற்கு அதிமுகவின் முன்னாள் - இந்நாள் தலைவர்கள் ஒரு முக்கிய காரணம்.

இப்போது, மேற்கு மண்டலத்தின் தொழில் வளர்ச்சியை, சிறு, குறு, நடுத்தர தொழில்துறையைக் காக்க வேண்டுமானால், அது பிஜேபியால்தான் முடியும் என்கிறது. அதற்கு நிதி ஒதுக்கீடு வழங்குவதாக வாக்குறுதிகளும் வழங்கி வருகிறது. ஒன்றிய அரசில் ஆட்சியிலிருக்கும் கட்சி மட்டுமே மேற்கு மண்டல தொழில் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும், எனவே பிஜேபிக்கு வாக்களியுங்கள் என வலம் வருகிறது.

இவ்வாறாக, சாதி அரசியலும், திராவிட இயக்கத்துக்கு மாற்று எனும் முழக்கங்களும், தொழில்துறை வளர்ச்சி நாயகன் எனும் முன்வைப்பும் அத்தோடு அதன் ஜனரஞ்சக நலத் திட்டங்களையும் உயர்த்திப் பிடித்து வாக்கு கேட்டு வலம் வருகிறது. இதன் மூலம் தமிழ் நாட்டில் தனது வாக்குகளை 20 சதவீதமாக உயர்த்த முடியும் என நம்புகிறது.

இந்தப் பின்னணியில்தான், இந்த மக்களவைத் தேர்தல் களத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

பல்லடம் கூட்டத்தில் பேசிய மோடி, தனது வீரதீர பராக்கிரமங்களை விளக்கிட தான் எப்படி காஷ்மீரைத் துண்டாட முடிந்தது என்று பேசினார். காசி - தமிழ்ச் சங்கமம் குறித்துப் பேசி தனக்கும், தன் மதவெறி அரசியலுக்கும் தமிழ்நாட்டுக்கும் இருக்கும் தொடர்பைப் புதுப்பித்துக்கொள்ள முயற்சித்தார். ஆனால், அவருக்குத் தெரியாதோ என்னவோ அதே காசியில்தான் பெரியார் தனது பிராமண எதிர்ப்பு, மதவெறி எதிர்ப்பு அரசியலை வளர்ப்பதற்கான ஞானத்தையும் பெற்றார் என்பது.

இப்படி, பல்வேறு முனைகளிலும், வெவ்வேறு விதமான முயற்சிகள் எடுத்ததனால் கண்டிப்பாக நாம் தமிழ்நாட்டில் இன்று காணும் பிஜேபி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் நாம் பார்த்த பிஜேபி அல்ல. இன்றைய காலகட்டத்தில் பிஜேபி தமிழ்நாட்டில் முன்வைக்கும் அரசியல் கண்டிப்பாக சில பலன்களை அதற்குப் பெற்றுத்தர வாய்ப்பு இருக்கிறது. இந்தத் தேர்தலில் பிஜேபி யின் வாக்கு சதவீதம் அதிகரிக்கலாம் என தமிழ்நாட்டு அரசியல் நோக்கர்களும் ஆய்வாளர்களும் கூட கணிக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் பிஜேபி அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவது அரசியல் புத்திசாலித்தனமல்ல. இன்று இல்லாவிட்டாலும், நாளைய கட்சியாக பிஜேபி பயணித்துக் கொண்டிருக்கிறது. அது தற்போது தேர்தல் மூலமாக மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் முற்போக்கு விழுமியங்களைச் சிதைத்து, முற்போக்குப் பாரம்பரியத்தை தகர்த்து அதன் அடிப்படையில்தான் வளர முடியும் என நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. அண்ணாமலை சொல்வது நமக்கு இன்று நகைப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், 50 சட்டமன்றத் தொகுதிகளை வெல்வது எனும் பிஜேபியின் குறிக்கோளைத்தான் அவர் தொடர்ந்து பேசி வருகிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய நாட்டு மக்களுக்கே மாபெரும் அபாயம் பிஜேபியும் ஆர்எஸ்எஸ்சும் தான். அதனை மனதில் வைத்து இந்த மக்களவைத் தேர்தலிலும், வரவிருக்கும்

சட்டமன்றத் தேர்தல்களிலும் பிஜேபிக்குத் தக்க பாடம் புகட்டுவது தமிழ்நாட்டு மக்களின் முக்கிய கடமையாகும்.

இந்த மக்களவைத் தேர்தலில் பிஜேபியைத் தோற்கடிப்பது தமிழ்நாட்டு மக்களின் தலையாய கடமையாகும். அது ஒரு தொகுதியில் கூட வெல்லக்கூடாது என்பது மட்டுமல்ல, அதன் வாக்கு சதவீதம் உயர்வதும் கூட தமிழ் மக்களுக்கு, தமிழ்நாட்டுக்கு எதிரானதே. எனவே, பிஜேபியைத் தேர்தலில் தோற்கடிப்பது, வாக்குகளைக் குறைப்பது என்பதை நமது முதன்மையான கடமையாகக் கொண்டு செயலாற்றிட வேண்டும்.

இந்திய நாட்டை இந்து ராஜ்யமாக மாற்றிட, அரசமைப்புச் சட்டத்தை அகற்றிட, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்திட கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டு வருகிறது பிஜேபி. அதேபோல, தமிழ்நாட்டின் முற்போக்கு விழுமியங்களைச் சிதைத்திடுவதை, மூடநம்பிக்கைகளை வளர்த்திடுவதை, கூட்டமைப்புத் தத்துவத்தைத் தகர்த்திடுவதை, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டை, இந்தி, பிராமண, மதவெறி தேசியவாதத்துக்கு அடிமைப்படுத்துவதை, மெல்ல மெல்ல தகர்ந்து கொண்டிருக்கும் சாதி ஆதிக்கத்துக்குப் புத்துயிர் கொடுப்பதை, தமிழ்நாட்டைப் பிற்போக்குப் பாதையில் கொண்டு செல்வதை, தமிழ்நாட்டு வரலாற்றுச் சக்கரத்தை, வளர்ச்சி சக்கரத்தைப் பின்னோக்கித் தள்ளிடுவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஆகவேதான்,
பிஜேபியைத் தோற்கடிப்போம்!
இந்தியா கூட்டணிக்கு வாக்களிப்போம்!
என முழங்கி களம் காண்கிறது சிபிஐஎம்எல்■

## களச் செய்திகள்

புதுச்சேரி நாடாளுமன்ற காங்கிரஸ் வேட்பாளர் வெ. வைத்திலிங்கம் ஆதரவு இந்தியா கூட்டணி கட்சிகள் ஊழியர்கள்கூட்டத்தில்,தோழர்.பாலசுப்பிரமணியன் பேசினார்.



### தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் ஏஐசிசி டி யு வெற்றி

சென்னை அருகே திருவள்ளூரிலுள்ள பேக்கிங் பொருட்கள் தயாரிப்பு நிறுவனமான ஜம்போ பேக் கம்பெனியில் நடைபெற்ற தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் ஏஐசிசிடியு 67 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது. அடுத்து வந்த LTUC 50 வாக்குகளும் சிஐடியு எட்டு வாக்குகளும் பெற்றுள்ளன வர இருக்கின்ற நீண்ட கால ஒப்பந்த பேச்சு வார்த்தைக்கு ஒரே கூட்டுப் பேர உரிமை சங்கமாக ஏ ஐ சி சி டி யு தேர்ந்தெடுக்கப் -பட்டுள்ளது. ஜம்போ பேக் தொழிலாளர்களுக்கு வாழ்த்துக்கள்!



### திண்டுக்கல் மக்களவைத் தொகுதி வேட்பாளர் சந்திப்பு

திண்டுக்கல் மக்களவைத் தொகுதி இந்தியா கூட்டணி சிபிஎம் கட்சி வேட்பாளர் தோழர். சச்சிதானந்தம் அவர்கள், மார்ச் 19 அன்று திண்டுக்கல் இகக(மாலெ) கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து ஆதரவு கோரினார். அப்போது மாவட்ட செயலாளர் சுப்புராமன் மற்றும் மாநிலக் குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன், மதிவாணன், ராமச்சந்திரன், பொன்னுதுரை மற்றும் ஜெகதீஸ் குமார் உடன் இருந்தனர்.



### குமரியில் தேர்தல் நிதியளிப்பு

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் பஸ் நிலைய ஏஐசிசிடியு சங்க தோழர்கள் தேர்தல் நிதியாக ரூ. 6500/- ஐ குளச்சல் கட்சி அலுவலகம் வந்து வழங்கினார்கள்



### இந்து ராஜ்யம் அமைப்பதுதான் ஆர்எஸ்எஸ் - பிஜேபி - மோடியின் கனவு!

- இந்து ராஜ்யம் என்றால் இந்துக்களின் ஆட்சி அல்ல, உழைக்கும் இந்து மக்களின் ஆட்சி அல்ல, ஏழை, எளிய மக்களின் ஆட்சி அல்ல. இந்துத்துவ மதவெறியர்களின், கார்ப்பரேட் பண முதலைகளின், அதானி - அம்பானிகளின் ஆட்சி. அதுதான் பிஜேபி சொல்லும் இந்து ராஜ்யம். ஆகவே, வேண்டாம் மோடி!
- இந்து ராஜ்யம் என்றால் அங்கு மதச்சார்பின்மைக்கு இடம் கிடையாது.
- பன்மைத்துவம் கொண்ட இந்தியத் தாய்த்திருநாடு இந்து தலிபான்கள் ஆட்சியாக மாற்றப்படும்.

### இந்து ராஜ்யத்தில் பெயருக்குக் கூட ஜனநாயகம் இருக்காது.

- கடந்த பத்தாண்டுகளில் மக்களவையில் விவாதங்களே இல்லாமல் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, வரலாறு காணாத வகையில், 146 மக்களவை உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டு, விவாதமே இல்லாமல் பல மக்கள் விரோதச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
- டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜிரிவால், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், தெலுங்கானா பிஆர்எஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான கவிதா, செந்தில் பாலாஜி... இப்படி எண்ணற்ற உள்நோக்கம் கொண்ட கைதுகள்!
- பாமகவை வளைத்துப் போட்ட கைது நடவடிக்கைப் புகைப்படங்கள்.
- நாம் தமிழர் கட்சி அலுவலகங்களில் திடீர் சோதனை (ரெய்டு).
- தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கு முடக்கம்.
- ஊழலை எதிர்க்க வேண்டும். அதில் இரு கருத்து இருக்க முடியாது.
- ஆனால், எதிர்க்கட்சிகளை மிரட்ட, எம்எல்ஏக்கள், எம்பிக்களை மிரட்டி வாங்கிட ஒரு தந்திரமாக அதைப் பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
- காங்கிரஸ் இல்லாத இந்தியா அல்ல, எதிர்க்கட்சிகள் இல்லாத இந்தியா - இதுதான் இந்து ராஷ்ட்ரா!

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

# மீண்டும் மோடி? வேண்டாம் மோடி!
# ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கி...

*மதவெறி பிடித்த, சாதியாதிக்க வெறி பிடித்த, பண வெறி பிடித்த கார்ப்பரேட், காவிப் பாசிச, சர்வாதிகார ஆட்சியை நடத்துகிறது மோடி அரசு.*

### அரசமைப்புச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்கிறது ஆர்எஸ்எஸ் - பிஜேபி

- டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இயற்றிய இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும். அதனிடத்தில், மனு (அ) நீதியை, காட்டுமிராண்டிகால சட்டத்தை அரசமைப்புச் சட்டமாகக் கொண்டுவர வேண்டும். இதுதான் மோடி-பிஜேபியின் கனவு.
- அதற்காகத்தான் 400 தொகுதி, மூன்றில் இரண்டு பங்கு வெற்றிபெற வேண்டும் என துடிக்கிறார் மோடி.
- நமக்குத் தேவை ஒரு நவீன இந்தியக் குடியரசு.
- மன்னர்கால, காட்டுமிராண்டிகால, சர்வாதிகார பாசிச ஆட்சி வேண்டாம்.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

### பெண்களை அடிமைகளாக்கும் மனு ஸ்மிருதி

- பெண்களை இரண்டாம் தர குடிமக்களை விட கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் சித்தரிக்கிறது.
- பெண்கள் நான்கு சுவர்களுக்குள் கட்டுண்டு கிடக்க வேண்டும்;
- அவர்கள் குழந்தை பெறும் எந்திரங்கள்தான் என்கிறது.
- உரிமையற்ற அடிமைகளாக பெண்களைச் சித்தரிக்கிறது.
- அவர்களுக்குச் சொத்துரிமை கிடையாது.
- அவர்கள் சம்பாதிப்பது எல்லாம் ஆணுக்கே சொந்தம் (மனு ஸ்மிருதி - பகுதி 5 + 8 - ஸ்லோகம் 148 – 149 + 416)
- அதைத்தான் இந்து ராஷ்ட்ராவின் அரசமைப்புச் சட்டமாக கொண்டுவரத் துடிக்கிறது.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

### ஒற்றை ஆட்சி

- இந்தியத் தாய்நாட்டின் மிக முக்கியமான சிறப்பம்சம் பன்மைத்துவம். அதைத் துடைத்தெறிந்திட துடிக்கிறது மோடி - பிஜேபி ஆட்சி.
- ஒரே கட்சி, ஒரே ஆட்சி, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே மதம், ஒரே உடை, ஒரே உணவு, ஒரே சிவில் சட்டம், ஒரே இனம் - இப்படி பன்மைத்துவத்தை ஒழித்து ஒற்றைத் தன்மையை, ஒற்றை ஆட்சியை நிறுவுவதையே தனது லட்சியமாகக் கொண்டிருக்கிறது

## மனு(அ)நீதி என்ன சொல்கிறது?

- சட்டத்தின் முன் அனைவரும் சமமல்ல என்கிறது மனு அநீதி.
- பிறப்பால் உயர்வு - தாழ்வு பாராட்டுகிறது.
- பிறந்த சாதி, செல்வச் செழிப்புக்கு ஏற்ப பாரபட்சமான நீதி வழங்கப்படும் என்கிறது.
- சட்டத்தின் மூலமான ஆட்சி அல்ல, மன்னராட்சிக்கு சமமான சர்வாதிகார ஆட்சியை முன்வைக்கிறது.
- நவீன, நாகரீகக் குடியரசுக்கு ஒவ்வாத தண்டனைகளை சாதியின் அடிப்படையில் முன்வைக்கிறது.
- இந்த நாட்டில் பிறந்த அனைவரும், சுமார் 97 சதவீதம் பேர், மேலிருக்கும் 3 சதவீதம் பேருக்கு, பிராமணர்களுக்கு, சேவை செய்வதற்காகவே பிறந்தவர்கள் என்கிறது (மனு ஸ்மிருதி - பகுதி 8 - ஸ்லோகம் 410, 413, 414).
- அப்படி கேள்விகளின்றி சேவை செய்ய மறுத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்கிறது.
- நாக்கை அறுப்பது, கை-கால்களை வெட்டுவது உள்ளிட்ட குரூரமான, கொடூரமான தண்டனைகளை முன்வைக்கிறது.
- சண்டாளர்கள் (பஞ்சமர்கள் ஆகிய தாழ்த்தப்பட்டவர்கள்) கிராமத்துக்கு / ஊருக்கு வெளியே வாழ வேண்டும் என்கிறது.
- நாய்களும் கழுதைகளும்தான் அவர்களின் சொத்து.
- செத்துப்போனவற்றின் தோல்களையே உடையாக உடுத்திக் கொள்ள வேண்டும் என்கிறது.
- அவர்கள் உண்ணுவதற்காக மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டும், உடைந்துபோன பாத்திரங்களில்தான் உண்ண வேண்டும் என்கிறது.
- அவர்கள் ஊருக்குள்ளும் கிராமத்திற்குள்ளும் இரவெல்லாம் சுற்றித் திரியக் கூடாது.
- பகலில், மன்னர் ஆணைப்படி, ஏதாவது வேலைகள் செய்ய வேண்டும் என்றால், ஊருக்கு வெளியே, ஊரைச் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டும்,
- அவர்கள் தம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் சின்னங்களை அணிந்திருக்க வேண்டும் என்கிறது (மனு ஸ்மிருதி - பகுதி 10 - ஸ்லோகம் 51 – 56).

## இளைஞர் விரோத மோடி ஆட்சி!

- வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது.
- கல்வி, திறமைக்கேற்ப வேலை கிடைப்பதில்லை.
- வேலை கொடுக்க வக்கில்லாத அரசு, இளைஞர்களை பக்கோடா விற்கச் சொல்கிறது.
- அரசுப் பணிகளில் பலப்பல லட்சக்கணக்கான வேலையிடங்கள் காலியாகவே இருக்கின்றன.
- தமிழ்நாட்டில் தமிழருக்கு வேலை இல்லை.
- வேலையில்லாக் காலத்துக்கு (வேலைதேட) வேலையற்றோர் நிவாரணமும் இல்லை.
- பெண்கள் வேலை பார்க்க சரியான பாதுகாப்பு இல்லை.
- பெண்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் இல்லை.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## பெண்கள் விரோத மோடி ஆட்சி!

- 1. பெண்கள் மீது பாலியல் வன்முறைகள், பாலியல் தாக்குதல்கள் அதிகரித்து விட்டன.
- 2. அவமரியாதைக் கொலைகள் அதிகரித்து வருகின்றன.
- 3. பெண்கள் தம் விருப்பப்படி மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மறுக்கப்படுகிறது.
- 4. காதலிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. மீறி காதலித்தால் ஆர் எஸ் எஸ் குண்டர் படைகள் தாக்குகின்றன.
- 5. ஒழுக்கக் காவலர்கள் என்ற பெயரில் இளம் பெண்கள் தாக்கப்படுகின்றனர். கூட்டுப் புணர்வுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.
- 6. பில்கிஸ் பானு மீது பாலியல் தாக்குதல் நடத்திய குற்றவாளிகளுக்கு அரசு பாதுகாப்பு!
- 7. குற்றவாளிகள் விடுதலையானால், இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!
- 8. தலித் பெண்கள் மீது பல மடங்கு அதிகரித்து வரும் பாலியல் தாக்குதல்கள்!

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## விவசாயிகள் விரோத மோடி ஆட்சி

- விவசாயம் செய்ய அருகதை உள்ளவர்கள் அதானிகளும் அம்பானிகளும்தான், விவசாயிகள் அல்ல என்கிறது.
- உணவுக்காக விவசாயம் என்பது போய் சந்தைக்காக விவசாயம் என்கிறது.
- விவசாயத்தை வணிகமயமாக்குகிறது. கார்ப்பரேட் முதலாளிகளுக்குச் சொந்தமானது என்கிறது.
- விவசாயத்தில் காண்ட்ராக்ட் முறையைப் புகுத்துகிறது.
- சாமான்ய மக்கள் விவசாயத்தை விட்டு ஓட வேண்டுமென அதை நஷ்டகரமாக்குகிறது.
- சிறு, குறு, நடுத்தர விவசாயிகள் தங்கள் நிலத்தை விற்குமாறு நிர்ப்பந்தப்படுத்துகிறது.
- இடுபொருட்கள் விலை அதிகரிக்கிறது.
- விளைபொருட்களுக்கு போதுமான விலை, குறைந்தபட்ச ஆதார விலையைக் கூட மறுக்கிறது.
- விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கான போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குகிறது.
- புதிய நிலக் கையகப்படுத்தும் சட்டங்கள் மூலம் விவசாயிகள் விளை நிலங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## விவசாயத் தொழிலாளர்கள் விரோத மோடி ஆட்சி!

- நூறு நாள் வேலைத் திட்டத்தை நாற்பது நாள் வேலைத் திட்டமாக சுருக்கி விட்டது.
- ஆதாரோடு வங்கிக் கணக்கை இணைப்பது என்ற பெயரில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நூறு நாள் வேலைத் திட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டனர். ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டு வருகிறது.
- நகர்ப்புற முதலாளிகளுக்கு மலிவான உழைப்பு, மலிவான கூலி பெறும் தொழிலாளர்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக, விவசாயத் தொழிலாளர்களை கிராமப்புறத்திலிருந்து வெளியேற்றி, நகரங்களுக்கு குடிபெயர கட்டாயப்படுத்துகிறது.
- குறைந்தபட்ச கூலியும் கூட மறுக்கப்படுகிறது.
- தமிழ்நாடு, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களுக்கு பல்லாயிரம் கோடி ஊதியபாக்கியை மறுத்து வரும் மோடி அரசு தேர்தல் சமயத்தில் கூலியை உயர்த்துவதாக நாடகமாடுகிறது.
- நிலமின்றி, வீடின்றி, வருமானமின்றி அனாதைகளாக, மேலும் வறியவர்களாகத் தவிக்கும் விதத்தில், விவசாயத் தொழிலாளர்களை, அவர்கள் வாழ்க்கையை நாசப்படுத்துகிறது.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## மாணவர் விரோத மோடி ஆட்சி!

- நீட், க்யூட் என எண்ணற்ற தமிழ் மாணவர் விரோத நுழைவுத் தேர்வுகள்
- இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு நியாயமே என வாதாடும் ஆட்சியாளர்கள்.
- அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்கு மூடுவிழா நடத்துவதையே தமது கடமையாகக் கொண்ட கல்விக் கொள்கை.
- கல்வித் துறையில் சாதி ஏற்றத் தாழ்வு போல ஏழை - பணக்காரன் ஏற்றத் தாழ்வு.
- கல்வி எட்டாக் கனியாகி விட்டது. ஏழைகளுக்கோர் கல்வி. செல்வம் படைத்தவர்களுக்கோர் கல்வி என ஏற்றத்தாழ்வு.
- வளாக ஜனநாயகம் ஒழிக்கப்பட்டு விட்டது. மாணவர் சங்கத் தேர்தல்களே நடத்தப்படுவதில்லை.
- அறிவார்ந்த, அறிவியல்பூர்வமான கல்வி முறைக்கு மாறாக, மூடத்தனத்தைக் கற்பிக்கும் அடிமைக் கல்வி முறை.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## தொழிலாளர் விரோத மோடி ஆட்சி! புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால்...

- பணி நிரந்தரம் என்பது கிடையவே கிடையாது. வேலைக்கு ஆலாய்ப் பறக்கும் உதிரிப் பாட்டாளிகளாக தொழிலாளர்கள் மாற்றப்படுகின்றனர்.
- குறைந்தபட்ச ஊதியம் (சுமார் ரூ 15,000) பறிக்கப்படுகிறது. தரைமட்ட ஊதியம் (இன்று நாளொன்றுக்கு ரூ 178 மாதத்திற்கு ரூ 5340) வழங்கினால் போதும் என்கிறது.
- பணி நிலைமைகள் கடுமையானதாக்கப்படுகின்றன.
- இ எஸ் அய், பி எஃப் கட்டாயமில்லை.
- புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற, பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டுவர மறுக்கிறது.
- ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியமும் கிடையாது, சம உரிமைகளும் கிடையாது.
- சங்க அங்கீகாரம் அறவே கிடையாது.
- வேலை நிறுத்த உரிமை பறிக்கப்படுகிறது. வேலை நிறுத்தம் சட்டவிரோதமாக்கப்படுகிறது.
- வேலை நிறுத்தம் செய்தால், தொழிலாளர் தலைவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது.
- மக்களவையிலும், மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டுவிட்ட அந்த சட்டங்கள் ஒரே ஒரு கையெழுத்துக்காக காத்துக் கொண்டிருக்கின்றன.
- தேர்தலில் வெற்றி பெறுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார் மோடி.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**

## கூட்டமைப்புக்கு எதிரான மோடி ஆட்சி

- பல மாநிலங்களுக்கும் உரிமை இருக்கிற ஓர் ஒன்றிய அரசு என்பதைத்தான் அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆனால், மாநிலங்களை நகராட்சிகள் போல உரிமையற்றதாக மாற்றிட எத்தனிக்கிறது மோடி ஆட்சி.
- ஐ ஏ எஸ், ஐ பி எஸ் அதிகாரிகளை, முதன்மைச் செயலாளர்கள் முதல் அனைத்து அதிகாரிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்து, ஒன்றிய சாம்ராஜ்யத்தை உருவாக்கப்பார்க்கிறது.
- ஜி எஸ் டி மூலம் வரி வசூல் செய்து, அதை மாநிலங்களுக்கு கொடுக்க மறுப்பதன் மூலம், மாநில அரசுகளை பொருளாதாரரீதியாக நசுக்குகிறது.
- இந்தியை, சமஸ்கிருதத்தைத் திணிப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் மொழி உரிமையை, தேசிய இன உரிமையைப் பறிக்கிறது. இப்படி, சமூக, பொருளாதார, அரசியல்ரீதியில் கூட்டமைப்புத் தத்துவத்தை ஒழித்துக்கட்டப் பார்க்கிறது.

**அதனால்தான், வேண்டாம் மோடி!**


மாலெ தீப்பொறி சந்தாதாரர்

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10

ஆண்டுச் சந்தா ரூ.200

நன்கொடைகள் தாரீர்

# சந்தர்ப்பவாத அதிமுக கூட்டணியைத் தோற்கடிப்போம்!

- சிம்சன்

கடந்த தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்திருந்த அதிமுக இந்தத் தேர்தலில் தனி அணியாக போட்டியிடுகிறது. பாஜகவின் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து விலகியதற்கு அதிமுக சொல்லும் காரணம் எம்ஜிஆர், ஜெயலலிதாவை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை இழிவுபடுத்தி பேசிவிட்டார் என்பதுதான். இது உண்மை என்றால், பல்லடம் பொதுக்கூட்டத்தில் மோடி, எம்ஜிஆர், ஜெயலலிதாவை புகழ்ந்து பேசியதைக் கேட்டு தனது முடிவை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அப்போ, உண்மைக் காரணம் வேறுதானே.

2014 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டு சேர மோடி எவ்வளவோ முயன்றும் லேடி ஜெயலலிதா அதை ஏற்கவில்லை. தனித்து நின்றார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவின் கடிவாளம் மோடி கைகளில் இருந்தது. ஜெயலலிதா மறைவுக்குப்பிறகு தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள, பாஜக ஆட்டியபடியெல்லாம் பழனிச்சாமி அடிபணிந்தார்; ஜெயலலிதாவுக்கே துரோகம் செய்தார். ஜெயலலிதா ஏற்க மறுத்த மோடி அரசின் அனைத்து மக்கள் விரோத சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் அதிமுக ஆதரவளித்தது. விளைவாக, கோபம் கொண்ட தமிழ்நாட்டு மக்கள், 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல்களில் அதிமுகவுக்கு தொடர் தோல்வியை பரிசளித்தனர்.

அதிமுகவின் எதிர்காலம், தனது அரசியல் வருங்காலம் (2026 சட்டப்பேரவைத் தேர்தல்) இவற்றை கணக்கில் கொண்டு எடப்பாடி பாஜகவிடமிருந்து விலகும் முடிவை எடுத்துள்ளார். அதிமுகவுக்குள் இருந்த ஓபிஎஸ், சசிகலா, தினகரன் உள்ளிட்டோரை வெளியேற்றிவிட்டு தனது 'ஒற்றைத் தலைமை'யின் கீழ் அதிமுகவை கைவசப்படுத்திக் கொண்டுவிட்டார் எடப்பாடி பழனிச்சாமி. அதிமுகவை அரசியல் சக்தியாக நிறுத்திட, "வாக்குகள் பெற பாஜகவுடன் கூட்டணி உதவாது. கட்சி கரைந்து போகலாம்" என்பதை உணர்ந்து தனி அணி முடிவை எடுத்துள்ளார். மெகா கூட்டணி பற்றி பேசிவந்தவர், தேமுதிக, புதிய தமிழகம், எஸ்டிபிஅய் கட்சிகளுடன் பயணத்தை நடத்த வேண்டியதாகிவிட்டது.

54 பக்கங்களில் 133 வாக்குறுதிகளையும் அதற்குள் ஏராளமான துணை வாக்குறுதிகளையும் அதிமுக தேர்தல் அறிக்கை அள்ளி அள்ளி வீசுகிறது. பல வாக்குறுதிகள் திமுகவின் வாக்குறுதிகளை ஒத்திருக்கிறது. ஆளுநர் நியமனம், நீட் தேர்வு, வழக்காடு மொழியாக தமிழ், குடியுரிமை திருத்தச் சட்டம், மாநிலப் பட்டியலில் கல்வி, புதிய கல்விக்கொள்கை தொடர்பான பல வாக்குறுதிகளும் உள்ளன. இதன் மூலம், மாநில மக்கள் நலன் பேணும், திமுகவுக்கு ஒரு மாற்று 'திராவிடக் கட்சி' அதிமுக எனும் தோற்றத்தை ஏற்படுத்த, மக்களை நம்பவைக்க, அதிமுக படாத பாடுபடுகிறது! வாக்குறுதி எண்கள் 62, 63ல், தமிழ்நாட்டில் ரயில்வே தொடர்பான 46 திட்டங்களைப் பட்டியலிடுகிறது. ஏழைப் பெண்களுக்கு மாதம் ரூ. 3000 உதவித்தொகை, பழைய ஓய்வூதியத் திட்டம், ஓய்வூதியம் மாதம் ரூ.5000 போன்ற பல நலத்திட்ட வாக்குறுதிகளையும் வாரி வாரி வழங்குகிறது அதிமுகவின் தேர்தல் அறிக்கை. இந்த கோரிக்கைகளுக்காக குரல்கொடுக்க, மத்திய அரசை வலியுறுத்த, நிறைவேற்றச்செய்யப் பாடுபடும் என தேர்தல் அறிக்கை வாக்குறுதி தருகிறது.

மேற்கண்ட வாக்குறுதிகளை பாஜக ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி செய்துதர அய்ந்தாண்டு காலம் வாய்ப்பிருந்தது. இந்த 133 வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட வலியுறுத்தி ஏன் நிறைவேற்றவில்லை என்பதே தமிழ்நாட்டு வாக்காளர்களின் கேள்வி. மாறாக பாஜக சொன்னதையெல்லாம் கேட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு விரோதமான சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டு வந்ததுதான் அதிமுக ஆட்சியின் சாதனை! விவசாயத்தை கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைக்கும் மூன்று வேளாண் சட்டங்களை அதிமுக ஆதரித்தது. ஓராண்டுக்கு மேலாகப் போராடி 600 பேர்களுக்கு மேலாக உயிரிழந்த விவசாயப் போராட்டத்தை அதிமுக ஆதரிக்கவில்லை. பாஜக அரசின் துணையுடன் சேலம் எட்டுவழிச்சாலை மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பறிக்க, கொடூரமான அடக்குமுறையை ஏவியது. வேதாந்தா முதலாளிக்காக, ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்தியது அதிமுக ஆட்சி. ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தீர்ப்பு உறுதிசெய்துள்ளதை திமுக வரவேற்றுள்ளது. ஆனால் அதிமுக கருத்து எதுவும் கூறவில்லை. தேர்தல் அறிக்கையும் அதுபற்றி பேசவில்லை. காஷ்மீருக்கு தனியுரிமை வழங்கும் அரசமைப்பு பிரிவு 370 ரத்து செய்யப்பட்டபோது, நாடாளுமன்றத்தில் அதிமுக எம்.பி நவநீதகிருஷ்ணன் எம்.ஜி.ஆர். பட பாடலைப் பாடி கொண்டாடினார்.

மோடி ஆட்சி கொண்டுவந்துள்ள குற்றவியல் சட்டங்கள் இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்படுவதையே தேர்தல் அறிக்கை விமர்சிக்கிறது. கொடூரமான போலீஸ் சர்வாதிகாரத்தைக் கொண்டுவருகிற அந்த சட்டத்தை முழுவதுமாக எதிர்க்கவில்லை. போலீஸ் ஆட்சிக்கு பெயர்பெற்ற எம்ஜிஆர், ஜெயலலிதா தொடர்ச்சியாக ஸ்டெர்லைட் பழனிச்சாமி இந்த சட்டத்தை எதிர்க்கவில்லை என்று தெரிகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத கட்சி அதிமுக என்பதையே இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

குடியுரிமை திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதாக, ஒன்றிய அரசு அறிவித்துள்ள பின்னணியில், தேர்தல் அறிக்கையின் 133 வது வாக்குறுதி இந்தச் சட்டம், மத, மொழி பாகுபாடு பார்ப்பதாகச் சொல்கிறது. பன்முகத்தன்மை, மதச்சார்பின்மை பற்றியெல்லாம் கூட பேசுகிறது. இஸ்லாமியர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் நட்பு முகம் காட்ட நினைக்கும் அதிமுக, இஸ்லாமியர்களையும் ஈழத்தமிழர்களையும் இதில் இணைக்க வேண்டுமென்று கூறுகிறது. ஆனால், பழனிச்சாமி உத்தரவின்படிதான், இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக, நாடாளுமன்றத்தில் அதிமுக வாக்களித்தது. எதிர்த்து வாக்களித்திருந்தால், இதுவரை தலைமேல் தொங்கிக் கொண்டிருந்த இந்தச் சட்டம் தேர்தல் சமயத்தில் தலையில் விழுந்திருக்காது. மதச்சார்பின்மைக்கும் கூட்டாட்சிக்கும் பன்முகத்தன்மைக்கும் அதிமுக பெரும் துரோகம் செய்துள்ளது. தேர்தலில் தனி அணியாக நின்று மக்கள் வாக்குகளைப் பெற்று தனது துரோகங்களைத் துடைத்தெறிந்து எழுந்து விடலாம் என்று எண்ணினால் அது நடக்காது. தமிழ்நாட்டு மக்கள் அதிமுகவை மன்னிக்கமாட்டார்கள்.

ஏற்கனவே அதிமுக போலவே பாஜகவுடன் கூட்டணி கண்டிருந்த தேமுதிக, புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் அதனிடமிருந்து விலகி வந்துள்ளன. தனது வாக்கு அடித்தளத்தையும் செல்வாக்கையும் கூட்டணிக்கு விலையாக கொடுத்த இக்கட்சிகள், பாஜகவின் உக்கிரமான இழுப்புகளை ஒதுக்கிவிட்டு வந்திருப்பதின் உண்மையான நோக்கம் என்ன? அதிமுக கூட்டணி, தமிழக மக்களுக்கும் முற்போக்கான தமிழ்நாட்டின் போராட்ட மரபுகளுக்கும் உண்மையிலேயே நேர்மையாக இருக்குமா?அதிமுக, பாஜக- பாமக கூட்டணியை தாக்காமல் திமுகவை குறிவைத்து பேசுவதனாலேயே இந்த கேள்வி எழுகிறது. நாடாளுமன்றத் தேர்தலில். பாஜக கூட்டணியை எதிர்ப்பதே பிரதானமாக இருக்க வேண்டும். அந்த பாதையைத்தான் தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். தேசத்துக்கும் அரசமைப்புக்கும் ஜனநாயகத்துக்கும் பேரழிவுமிக்க அச்சுறுத்தலான பாஜக - பாமக கூட்டணியைத் தோற்கடிக்க முடிவுசெய்துள்ள வாக்காளர்கள், சந்தர்ப்பவாத அதிமுக கூட்டணியையும் நிராகரிப்பார்கள்; நிச்சயம் தோற்கடிப்பார்கள். “தமிழர் உரிமை மீட்போம், தமிழ்நாடு காப்போம்” என்று அதிமுக தேர்தல் அறிக்கை கூறுகிறது. யாரிடமிருந்து என்ற கேள்விக்கு அமைதி காக்கிறது. இது அமைதி அல்ல, சந்தர்ப்பவாதம் ■

# களச் செய்திகள்

### மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி வாக்குகள் சேகரிப்பு



சிபிஐ எம் எல்கட்சியின் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் தயாரிப்பு ஊழியர்கள் கூட்டம் மார்ச் 22 அன்று கும்பகோணத்தில்நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலச் செயலாளர் தோழர் பழ ஆசைத்தம்பி, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ சங்கர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டன, மயிலாடுதுறை தொகுதியில் கும்பகோணத்திலும், சீர்காழியிலும் மக்கள்திரள் பேரணிகள் நடத்துவது. ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் இருசக்கர பேரணிகள், வீடுவீடாக வாக்கு சேகரிப்பு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

### விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வாக்குகள் சேகரிப்பு



விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் நகரத்தில் இந்தியா கூட்டணியின் வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் பொதுச்செயலாளர் தோழர். ரவிக்குமாருக்கு சிபிஐஎம்எல் கட்சியின் மாவட்ட செயலாளர் தோழர் கலியமூர்த்தி தலைமையில் தோழர்கள், லோகநாதன், தணிகாசலம்,ஏழுமலை, காமராஜ்,பரமசிவம், ஆரோக்கியசாமி,பிரபாகரன் உள்ளிட்ட தோழர்கள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# களச் செய்திகள்



### இகக(மாலெ) சேலம் மாவட்டம் : தேர்தல் தயாரிப்பு ஊழியர் கூட்டம்

17-3-2024 அன்று, சேலம் (டவுன் ரயில் நிலையம் அருகில்) உள்ள R B மஹாலில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமை தாங்கினார். மாநில கமிட்டி உறுப்பினர் அய்யந்துரை மாநில கமிட்டி முடிவுகளை விளக்கினார். மத்திய கமிட்டி உறுப்பினரும் மாநில தேர்தல் பணிக்குழு உறுப்பினருமான தோழர். சந்திரமோகன், 'பாராளுமன்ற தேர்தலில் கட்சி நிலைப்பாடு மற்றும் தேர்தல் பிரச்சார அரசியல் மற்றும் வழிமுறைகள்', செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை உள்ளிட்டு விரிவாக விளக்கிப் பேசினார். சேலம் நாடாளுமன்ற தொகுதியில் சேலம் தெற்கு மற்றும் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிகள், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் ஏற்காடு சட்டமன்ற தொகுதி உட்பட மொத்தம் 3 சட்டமன்ற தொகுதிகளில் கவனம் செலுத்த தீர்மானிக்கப்பட்டது.



### திருவள்ளூர் மக்களவைத் தொகுதி வேட்பு மனு தாக்கல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி( மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) விடுதலை கட்சி சார்பாக திருவள்ளூர் மக்களவைத் தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்கள் வேட்பு மனு தாக்கலின் போது தோழர் அன்பு தலைமையில் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### ஊத்துக்கோட்டை ஊழியர் கூட்டம்

29.03.2024 நாடாளுமன்ற தேர்தல் ஊழியர் கூட்டம் ஊத்துக்கோட்டை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துகளில் இருந்து இகக(மாலெ)விடுதலை பொறுப்பாளர்களும், கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். ஊழியர் கூட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர் இரணியப்பன், மாவட்டச் செயலாளர் அன்பு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### காவிப் பாசிச பாஜகவைத் தோற்கடிக்க, சனாதன , சாதியாதிக்கத்தை முறியடிக்க மாவீரன் பகத்சிங்கின் 93 ஆம் நினைவு நாளில் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி உறுதியேற்பு



மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி மற்றும் புரட்சிகர இளைஞர் கழகம் சார்பாக நெல்லை தாழையூத்தில் 23.3.2024 அன்று காலையில் பகத்சிங் நினைவு நாள் உறுதியேற்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பகத்சிங் கனவு கண்ட இந்தியாவை உருவாக்கிட காவிப் பாசிச பாஜக கூட்டணியைத் தோற்கடிக்கவும் இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்யவும் சனாதனத்தை, சாதியாதிக்கத்தை முறியடிக்கவும் உறுதியேற்கப்பட்டது. சாதியாதிக்க வெறி கொண்ட சமூக விரோதிகள் சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களைத் தாக்கியதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் எம். சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். மாரியப்பன் துவக்கவுரையாற்றினார். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் சங்கர பாண்டியன், வழக்கறிஞர் ஜி.ரமேஷ் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் மாவட்டக் குழு உறுப்பினர் பேச்சிராஜா மற்றும் நெல்லைத் தங்கம் கருப்பசாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்த பகத்சிங் நினைவு நாள் நிகழ்ச்சியில் தாழையூத்து பகுதியைச் சேர்ந்த உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த 50 பேர் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியில் தங்களை உறுப்பினராக இணைத்துக் கொண்டனர்.

# சிறுபான்மையினருக்கு, ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை மறுப்புச் சட்டம்?

**- செந்தில்**

மார்ச் 11 அன்று தேர்தல் பத்திரங்கள் சம்பந்தமாக தேவைப்படும் தகவல்களை வழங்குவதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்ற ஸ்டேட் பேங்கின் வேண்டுகோள் மீது, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக இந்த நாடு காத்துக் கொண்டிருந்தது. ஆனால். அதே நாள், குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 ஐ அமல்படுத்துவதற்கான விதிகளை, மிக நீண்ட காலம் கழித்து, மோடி அரசாங்கம் அறிவித்தது. இச்சட்டம் 2019 டிசம்பர் 11 அன்று நிறைவேற்றப் பட்டிருந்தது. ஆனால் அதற்கான விதிகளை அறிவிப்பதற்கு மோடி அரசாங்கத்திற்கு 51 மாதங்கள் ஆகி இருக்கிறது. ஏன்? ஒரே காரணம்தான். 2024 தேர்தல். தேர்தல் நேரத்தில் மீண்டும் குடியுரிமைப் பிரச்சனையைக் கிளப்புவதன் மூலம் வாக்காளர்களை மதவெறியின் அடிப்படையில் பிளவுபடுத்தலாம் என்பதற்காகத்தான். அடிப்படை பிரச்சனைகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் திசை திருப்பலாம் என்பதற்காகத்தான்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காகவே குடியுரிமை திருத்தச் சட்டம்; இது எவருக்கும் குடியுரிமையை மறுப்பதற்கான கருவியல்ல என்கிறது பிஜேபி. இப்படி சொல்வதன் மூலம் மீண்டும் மக்களை தவறாக வழி நடத்துகிறது பிஜேபி. இதைவிட மிகப்பெரிய புளுகு மூட்டை வேறெதுவும் இருக்கவே முடியாது. நாடு தழுவிய தேசிய குடிமக்கள் பதிவேட்டிற்கான (என் ஆர் சி) முன்னோடி தான் இந்த குடியுரிமை திருத்த சட்டம் என நான்கு வருடங்களுக்கு முன்பு குடியுரிமை திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் அமித் ஷா தெளிவாகவே கூறினார். தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (என்ஆர்சி) ‘சோதனை’யில் தவறிய, மொழி மற்றும் மதம் சார்ந்த சமூகங்கள் அனைத்திலும் உள்ள ஏழைகள், போதுமான ஆவணங்கள் இல்லாதவர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பது ஏற்கனவே அம்பலமாகி உள்ளது. அசாம் அனுபவம் அதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. அதே வேளையில், அரசமைப்புச் சட்டத்தின் மதச்சார்பற்ற கோட்பாடுகளை அடிப்படையில் மீறுகிற இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் (சிஏஏ), குடியுரிமையை தீய மதவெறிமயமாக்குகிறது. இதனை அங்கீகரிக்கும் வண்ணமாக, இந்தக் குடியுரிமை திருத்தச் சட்ட (சிஏஏ) சதிக்கு எதிராக, ஷகீன்பாக் சமத்துவ குடியுரிமை இயக்கம் மாபெரும் மக்கள் இயக்கமாக எழுந்தது. நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ஷகீன்பாக்குகள் உருவாகின. கோவிட் பெருந்தொற்று இடையூறு செய்வதற்கு முன்னால் எழுந்த அந்த இயக்கம், நாடு தழுவிய அளவில் பரந்த மக்கள் ஆதரவைப் பெறத் தொடங்கியது. அந்த இயக்கத்தை நசுக்கிட, அந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய செயல்பாட்டாளர்களை பொய்யாக புனையப்பட்ட வழக்குகளில் கைது செய்தது பிஜேபி அரசு. டெல்லியில் மதவெறி வன்முறையை ஏவி விட்டது.

சுமார் 95,000 ஈழத் தமிழர்கள், சட்டரீதியாகவும் சட்டத்திற்கு அப்பாலும், தமிழ்நாட்டில், இந்தியாவில், அடைக்கலம் புகுந்துள்ளனர் என அரசு அமைத்த கமிட்டியின் அறிக்கை சொல்கிறது. அதில் சுமார் 58,500 பேர் மாநில அரசின் மறுவாழ்வு முகாம்களிலும், சுமார் 33,500 பேர் காவல்துறையில் பதிவு செய்யப்பட்ட வெளி முகாம்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அதில் சுமார் 45 சதவீதம் பேர் இந்தியாவிலேயே பிறந்தவர்கள் என அரசு புள்ளிவிபரம் கூறுகிறது. அப்படி இருக்கும்போது, அவர்களுக்கு குடியுரிமை வழங்க மோடி அரசு தயாராக இல்லை. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் ஒடுக்கப்படும் இந்துக்களுக்கு குடியுரிமை வழங்குவதாக பம்மாத்து காட்டும் மோடியும் பிஜேபியும், தமிழ்நாட்டிலேயே பல ஆண்டுகளாக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு குடியுரிமை ஏன் வழங்கக் கூடாது? பலமுறை தமிழ்நாட்டு மக்கள் வாக்குகளைப் பெற ஓடோடி வரும் மோடியோ, அண்ணாமலைகளோ அதைப் பற்றி வாயே திறப்பதில்லையே ஏன்? எனவே குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்பது மதவெறியின் அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்துவது மட்டுமல்ல, தேசிய இன அடிப்படையிலும்

மக்களைப் பிளவுபடுத்துகிறது. அசாம் மக்களுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் கூட குடியுரிமை மறுப்பதன் மூலம் பிஜேபி தமிழ் மக்கள் விரோதி, தேசிய இன விரோதி என்பதை வெளிப்படையாக அறிவித்துக் கொள்கிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம், மக்களைப் பிளவுபடுத்திட பிஜேபி தொடுக்கும் பொய்ப் பரப்புரைகளை நாம் நிச்சயமாக முறியடித்தாக வேண்டும். மேலும் சிஏஏ - என்ஆர்சி தொகுப்பின் பேரழிவுமிக்க பாதிப்புகளுக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும். சிஏஏவின் கீழ் குடியுரிமை வழங்கப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்படுகிறது. ஆனால், குடியுரிமை கோருபவர்கள் முதலில் தாங்கள் சட்டவிரோத குடியேறிகள் என ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறது. குடியுரிமை வழங்கப்படும் என்ற மாயையான வாக்குறுதி வழங்கப்பட்டவர்களில் சிலர் மட்டுமே அதற்குத் தேவையான ஆவணங்களை அளிக்க முடியும், சிஏஏ சோதனையைக் கடக்க முடியும். இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த, எப்படியாவது வாழ்வில் ஒரு பிடிமானத்தை பெற்றுவிட வேண்டும் என ஏங்குகிற, அதற்காகப் பல இடர்ப்பாடுகளையும், வறுமையையும் எதிர்கொண்ட மக்களின் துயரங்களோடும் உணர்வுகளோடும் கொடூரமாக விளையாடுகிறார் மோடி. அத்தகைய கொடுங்கோன்மை மோடியின் மற்றுமொரு வெற்று வாக்குறுதிதான் குடியுரிமை வாக்குறுதிகள். தாமதமாகவேனும் நீதியை வழங்குவது என்னும் பெயரில் இந்த சிஏஏ அவர்களுடைய வாழ்வை இடையூறுக்கு உள்ளாக்க மட்டுமே செய்யும்; நிச்சயமற்ற, பாதுகாப்பற்ற நிலைக்கு மீண்டும் அவர்களைத் தள்ளிவிட மட்டுமே செய்யும்.

மோடியின் தொடர் வெற்று வாக்குறுதிகளைக் கண்டு மயங்கிடாமல், பண மதிப்பிழப்பு முதல் முழு முடக்கம் வரை மோடி தலைமை தாங்கிய தொடர் பேரழிவுகளை எதிர்த்து நின்று, குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்ட உத்திரவாதம் கேட்ட விவசாயிகள் இயக்கம், பழைய ஓய்வூதிய திட்டம் திரும்ப கொண்டு வரப்பட வேண்டும் என்ற அரசு ஊழியர்களின் இயக்கம், தனியார்மயம், ஒப்பந்தமயத்திற்கு எதிரான இளைஞர்கள் இயக்கம், தங்களின் வேலைக்கான அங்கீகாரமும் சிறந்த ஊதியமும் கேட்ட திட்டப் பணியாளர்களின் இயக்கம், சாதிவாரி கணக்கெடுப்பும் விரிவாக்கப்பட்ட இட ஒதுக்கீடும் கோரிய தலித் - பகுஜன் இயக்கம் போன்ற ஆற்றல் வாய்ந்த ஒன்றுபட்ட போராட்டங்களைக் கட்டி எழுப்பிய இந்திய மக்கள், தங்களைப் பிளவுபடுத்துகிற இந்த சிஏஏ-என்ஆர்சி சூழ்ச்சியை நிச்சயமாக உறுதியுடன் நிராகரிக்க வேண்டும். சங்கிப் படையின் ஒவ்வொரு சதிகார சூழ்ச்சிகளையும் முறியடிக்கும் காலம் வந்துவிட்டது; ஒவ்வொரு வாக்கையும் பயன்படுத்தி மோடி ஆட்சியை தூக்கி எறிய வேண்டிய காலம் வந்து விட்டது.

*(2024 மார்ச் 12 - 18 எம்எல் அப்டேட், தலையங்கத்தை தழுவி எழுதப்பட்டது)* ■

## தோழர் சசி யாதவ் - பீகார் மாநில சட்ட மேலவை உறுப்பினராக தேர்வு!



*இககமாலெ கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினரும் அகில இந்திய திட்டப் பணியாளர் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான தோழர் சசி யாதவ், சிபிஐ எம்எல் அங்கம் வகிக்கும் பீகார் மகா கூட்டணியின் இதர வேட்பாளர்களுடன் பீகாரின் சட்ட மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*பீகாரில் ஆஷா - சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடி தொழிலாளர்கள் மற்றும் மதிய உணவு தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சிறந்த ஊதியத்திற்காகவும், தொழிலாளர் கவுரவத்திற்காகவும் முன்னணியில் நின்று செயலாற்றிய போராட்டக்காரர். இம்மாநிலத்தின் ஆஷா சுகாதார பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க 32 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர். அதன் மூலம், ஜூலை 2023 இல் ஆஷாக்களுக்கு மதிப்பூதியம் அதிகப்படுத்த வேண்டும் எனும் கோரிக்கைப் போராட்டத்தில் வெற்றி கண்டவர்.*

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) - ன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர். ஏஐசிசிடியு மற்றும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தில் அகில இந்திய செயலாளராக பணியாற்றுகிறார்.*

# சர்வாதிகார மோடி ஆட்சியைத் தோற்கடிப்போம்!



2013 இல் 'பிரதம மந்திரியாக மோடி' என்ற பரப்புரை தொடங்கப்பட்டது. அன்று முதல், மோடி வழிபாடு என்பதை மையமாகக் கொண்டு மாபெரும் பரப்புரைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான பணபலம் என்பது மோடி வழிமுறையின் தேர்தல் முத்திரையாக இருந்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் மோடி வழிபாடும், மிருகத்தனமான பணபலமும் பெரும் பாய்ச்சலை எட்டியுள்ளன. இந்திய அரசமைப்புச் சட்டத்தை அதல பாதாளத்திற்குள் தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டு, 400 தொகுதிகளுக்கும் அதிகமான பெரும்பான்மை பெறுவோம் என ஆணவக் கூச்சலிடுகிறார் மோடி. மூன்றாவது முறை பிரதமராகத் துடிக்கிறார் மோடி. ஒன்றுபட்ட எதிர்க்கட்சி கூட்டணியைச் சுற்றி அணிதிரளும் மக்கள், தமது ஆட்சியை அகற்றி விடுவார்களோ என பெரும் அச்சப்படுகிறார். ஒன்றிய அரசு நிறுவனங்களை (அமுலாக்கத் துறை, வருமான வரித் துறை, தேசிய புலனாய்வுத் துறை) ஆயுதங்களாகக் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர்களைத் துன்புறுத்துகிறார், கைது செய்து சிறையில் அடைக்கிறார். இவையெல்லாம் 2024 தேர்தல் காலத்தில் மோடியின் விரக்தியையே சுட்டிக்காட்டுகின்றன.

மார்ச் 16 அன்று தேர்தல் ஆணையம் நாடாளுமன்றத்திற்கான 18 வது பொது தேர்தலின் அட்டவணையை அறிவித்தது. அப்போது தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல்களில் போட்டியிடுபவர்களுக்கு சம வாய்ப்பு வழங்கப்படும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். ஆனால், மாதிரி நடத்தை விதிமுறைகள் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளாகவே, மற்றுமொரு பாஜக அல்லாத அரசாங்கத்தின் முதலமைச்சர் அமலாக்க துறையினரால் கைது செய்யப்பட்டார். ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரனுக்குப் பிறகு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். ஆனால், மனிஷ் சிசோடியா முதல் அரவிந்த் கெஜ்ரிவால் வரை கைது செய்யப்பட்டுள்ள எந்தவொரு ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களுக்கு எதிராகவும், மதுக் கொள்கை மோசடி வழக்கில், எந்தவொரு ஆதாரத்தையும் இன்றைய நாள் வரை அமுலாக்கத் துறையால் சமர்ப்பிக்க முடியவில்லை என்பதுதான் கேலிக்குரியது ஆகும். அதே வேளையில், அதே டெல்லி மதுக் கொள்கை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, அரசு சாட்சியாக மாறிய பி சரத் சந்திர ரெட்டி இயக்குனராக உள்ள அரோபிந்தோ பார்மா லிமிடெட் கம்பெனியிடமிருந்து, பாஜக பெரும் நிதி பெற்றிருக்கிறது என்பதை, ஸ்டேட் பேங்க் வெளியிட்டுள்ள தேர்தல் பத்திர தரவுகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஓராண்டிற்கும் மேலாக பிணை விடுதலையின்றி மனிஷ் சிசோடியா சிறையில் வாடிக் கொண்டிருக்கும்போது, 2022 நவம்பரில் இதே வழக்கில் கைது செய்யப்பட்ட பி சரத் ரெட்டி 2023 மே மாதத்திலேயே பிணை விடுதலை பெற்று விட்டார். அவர் கைது செய்யப்பட்ட ஐந்து நாட்களுக்குப் பிறகு அவரது நிறுவனம், பாஜகவிற்கு 5 கோடி ரூபாய் நன்கொடையை வழங்கியிருக்கிறது. அந்த நிறுவனம் வரிசையாக பல நன்கொடைகளை பிஜேபிக்குத்தான் வழங்கியுள்ளது. மே மாதத்தில் பிணை விடுதலை பெற்ற, சரத் ரெட்டி ஜூன் மாதத்தில் அரசு சாட்சியாக மாறினார். அடுத்த இரண்டு மாதங்களில் மேலும் 25 கோடி ரூபாயை பாஜகவிற்கு நன்கொடையாகவும் வழங்கினார். மொத்தத்தில் சரத் ரெட்டியினுடைய தந்தை பிவி ராம் பிரசாத் ரெட்டி-யால் நிறுவப்பட்ட அரோபிந்தோ பார்மா லிமிடெட் கம்பெனியும், அதோடு தொடர்புடைய வேறு இரண்டு நிறுவனங்களும், கிட்டத்தட்ட 55 கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்களின் வழியாக பிஜேபிக்கு வழங்கி இருக்கிறது. அதே நேரத்தில் தெலுங்கானா

ராஷ்ட்ரிய சமிதி 15 கோடியையும், தெலுங்கு தேசம் கட்சி 2.5 கோடியையும் அரோபிந்தோ பார்மா நிறுவனத்திடம் இருந்து பெற்றுள்ளன. கொழுத்த லஞ்சத்தை பெறுவதற்காக மட்டுமல்ல, எதிர்கட்சியினரைத் தாக்குவதற்கான கருவியாகவும், இந்த நிறுவனங்கள் மோடியால் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

இதுவரையிலும் இந்தத் தேர்தல் பத்திர மோசடியின் சிக்கலான முடிச்சுகள் அவிழ்க்கப்பட்ட விதம் கண்டு மோடி அரசு கலங்கி போய் இருக்கிறது. அது இந்த மோசடியிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு தன்னாலான அனைத்தையும் முயற்சிக்கிறது. இந்தத் தேர்தல் பத்திர திட்டம் என்பது, பண மோசடிக்கும், நிறுவனமயமாக்கப்பட்ட ஊழலுக்கும் வாய்ப்பான வெட்கக்கேடான முறையாகும். ஸ்டேட் பேங்க் இறுதியாக சமர்ப்பித்த தரவுகள் மூலம் இது அம்பலமாகிறது. கட்டுமானம், மருந்து நிறுவனங்கள், சுரங்க நிறுவனங்கள் இன்னும் இது போன்ற வெவ்வேறு துறைகளில் உள்ள நன்கு அறியப்பட்ட கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அக்கம் பக்கமாகவே, பலராலும் அறியப்படாத புதிதாக உருவாக்கப்பட்ட பல நிறுவனங்களும் கூட பெரும் தொகைகளுக்கு பத்திரங்களை வாங்கியுள்ளன என்பது ஊடகவியலாளர்கள் முயற்சிகளால் வெளிப்பட்டது. பதிவேடுகளின்படி, அவர்களுடைய நிறுவனம் சம்பாதித்த லாபத்தை விட பல மடங்கு அதிக தொகைகளுக்கு பத்திரங்களை வாங்கி இருக்கிறார்கள் என தெரிகிறது. மேலும் சில நிறுவனங்கள் உண்மையிலேயே நட்டத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பத்திரங்கள் பண மோசடி செய்வதற்கான வழியாக மாற்றப்பட்டுவிடும் என தனது பெரும் கவலையை ரிசர்வ் வங்கி வெளிப்படுத்தியது. இது வெளிப்படைத்தன்மையையும், சம போட்டிக்கான வாய்ப்பையும் மறுத்து விடும் என தேர்தல் ஆணையம் எச்சரித்தது. இந்தப் பத்திரங்களின் மூலமாக நன்கொடை வழங்கும் கம்பெனிகள், அதற்கு கைமாறாக, தண்டனைகளில் இருந்து விலக்கு பெறுவது, ஒப்பந்தங்களைப் பெறுவது, கொள்கைகளில் சாதகமான மாற்றங்களையும் கூட பெறுவது என்பவற்றுக்கான ஒரு முறையாக இந்தப் பத்திரங்கள் மாறிவிடும் என உச்ச நீதிமன்றம் எச்சரித்தது. இப்போது அது போலவே நடந்து விட்டது. இவையனைத்தும் உண்மையென நிரூபிக்கப்பட்டு விட்டன. அனைத்து அறிகுறிகளின்படியும் பார்த்தால், இந்தத் தேர்தல் பத்திர திட்டம் என்பது சுதந்திர இந்தியாவின் பெரும் வெட்கக்கேடு எனலாம். அரசு ஆதரவுடன், சட்டபூர்வமாக நடத்தப்பட்டதோர் நிதி மற்றும் அரசியல் ஊழல் முறை இது. உச்சநீதிமன்றத்தின் முன்பு ஸ்டேட் பேங்க் மீண்டும் மீண்டும் பொய் சொன்னது, பத்திரங்கள் குறித்த தகவல்களை வெளியிடுவதைத் தவிர்க்க பல நொண்டிச்சாக்குகள் சொன்னது ஆகியன இந்த தேர்தல் பத்திர மோசடியின் ஊழல் அடிப்படையை உறுதி செய்கிறது.

முதன்மை ஊடகங்கள், மிகப்பெரிய இந்த மோசடி குறித்த அனைத்து தகவல்களையும் விவாதங்களையும் தடுத்து விட்டன, மறைத்தும் விட்டன. புலனாய்வு ஊடகவியலாளர்கள், உண்மையறியும் ஆராய்ச்சியாளர்கள், வெளிப்படைத் தன்மையைப் பரப்புரை செய்பவர்கள் ஆகியோரைக் கொண்ட அர்ப்பணிப்பு மிக்க குழுவினரால் அம்பலப்படுத்தப்பட்ட இந்த மோசடி குறித்த உண்மையான தகவல்களை மாற்று ஊடகங்களின் வாயிலாகவே மக்கள் தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே இந்த அரசாங்கம், மாற்று ஊடகங்களின் குரல் வளையையும் நெறிக்கப் பார்க்கிறது. ‘உண்மைதானா என சோதிக்கும்’ அதிகாரத்தை தனக்குத்தானே வழங்கிக் கொண்டு, அவை பொய்யானவை என முத்திரை குத்துவதன் மூலம் எந்த ஒரு விமர்சனத்தையும், அதைப் பரப்பும் வலைதளங்ளையும் முடக்க, தடுக்க முயற்சிக்கிறது. இந்தக் கொடூர நடவடிக்கையை, ‘உண்மைதானா என சோதிக்கும்’ அரசின் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தடை செய்ததன் காரணமாக சில தற்காலிக நிவாரணங்களை வலைதளங்களும் சமூக ஊடகங்களும் அனுபவிக்கின்றன. ஆனால் பேச்சு சுதந்திரம், கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், மாற்று ஊடகம் ஆகியவற்றிற்கான அச்சுறுத்தல் மிகப்பெரும் ஆபத்தாக முன்வந்திருக்கிறது.

மோடி அரசாட்சி மூன்றாவது முறையும் ஆட்சிக்கு வந்தால், அது அப்பட்டமான ஊழல், கட்டுப்படுத்த முடியாத கார்ப்பரேட் கொள்ளை ஆகியவற்றுக்கு வழி வகுக்கும். அரசியல் சாசன சட்டத்தை அதல பாதாளத்தில் தள்ளுவதாக முடிந்து போகும். ஜனநாயகம், மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம், சிவில் உரிமைகள் போன்ற அதன் பன்மைத்துவ தன்மைகள் அரித்துப் போகும். அத்தகைய பிற்போக்கு அம்சங்கள் கூடுதல் உந்துதல் பெறும். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால், 2002ல், மதவெறி இனப்படுகொலை, அதிகரித்துக் கொண்டிருந்த விவசாய நெருக்கடி, பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலை ஆகியவற்றின் பின்னணியில், அடல் - அத்வானி தலைமையிலான தேசிய ஜனநாயக அரசாங்கம் (என்டிஏ) இந்திய மக்களால் ஆட்சிக் கட்டிலிலிருந்து அகற்றப்பட்டது. அதே போல, அதிகரித்துக் கொண்டிருக்கும் பொருளாதார, சமூக பேரழிவுகளை மற்றும் சர்வாதிகார ஆட்சியைத் தோற்கடித்திட 2024ல், இந்திய மக்கள் மீண்டும் எழுந்திட வேண்டும்.

*(லிபரேசன் 2024 ஏப்ரல் தலையங்கத்தைத் தழுவியது)* ■

# மோடி உத்தரவாதம் – உலக மகா வாய்ச் சவடால்



**எகிறிக் குதிக்கும் ஏற்றத்தாழ்வு!**

**தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம்!**

**வீழ்ச்சி அடையும் ஊதியம்!**

# என்ன செய்தார் மோடி?

## வாய்ச் சவடால் உத்தரவாதம்

இளைஞர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு செயல்படுகிறது மோடி அரசு.

## உண்மை

- பட்டம் படித்தும், வேலையில்லாமல் இருக்கும் 25 வயதிற்கும் கீழே உள்ள இளைஞர்கள் 42 சதவீதம் பேர்.
- வேலையற்றோரில் 71 சதவீதம் பேர் 35 வயதிற்கும் கீழே உள்ள பட்டதாரிகள்.

---

மோடி ஆட்சியில் வாய்ப்புகளும் வருமானங்களும் உயர்கின்றன. வறுமை வீழ்ச்சி அடைகிறது.

மோடி ஆட்சியில் குறைந்தபட்ச தேசிய ஊதியம் 42 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.


**Figure 1** : Unemployment rates across age and education levels*

| | Less than 25 | 25-29 | 30-34 | 35-39 | 40+ |
|---|---|---|---|---|---|
| Graduate and above | 41.7 | 21.4 | 7.9 | 3.4 | 1.4 |
| Higher Secondary | 18.4 | 6.8 | 4.1 | 1.4 | 1.1 |
| Secondary | 12.2 | 6.3 | 4.1 | 1.4 | 1.1 |
| Primary or Middle | 10.2 | 3.4 | 2.4 | 1.8 | 1.6 |
| Literate but below primary | 6.9 | 0.3 | 2.8 | 1.9 | 2.3 |
| Illiterate | 7.2 | 2.4 | 2.8 | 0.8 | 2.1 |

- உண்மை ஊதியம் குறைந்திருக்கிறது. 2011ல் 100 ரூபாய்க்கு வாங்கிய அதே பொருளை இப்போது வாங்க முடிவதில்லை.
- தரை மட்ட ஊதியம் நாளொன்றுக்கு கிராமங்களில் ரூ 375 (மாதம் ரூ11,250) நகரங்களில் ரூ 430 (மாதம் ரூ 12900இருக்க வேண்டும் என அனுப் சத்பதி கமிட்டி 2019ல் பரிந்துரை செய்தது. அந்தக் கமிட்டி கலைக்கப்பட்டது.
- இன்றைய தேதியில், 2024ல், தரைமட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ 178 (மாதம் ரூ 5340)
- தரைமட்ட ஊதியத்தை விட குறைவாக வருமானம் உள்ளவர்கள், மாதச் சம்பளம் பெறுபவர்களில் பாதி பேர், கேசுவல் தொழிலாளர்கள் 90 சதவீதம் பேர், சுயவேலை செய்பவர்கள் 60 சதவீதம் பேர்.

---

ஏழைகள் அல்ல, பரம ஏழைகளின் வளர்ச்சி, பட்டியல் இனத்தோர், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர், உரிமை மறுக்கப்பட்டோரின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்றார் மோடி.




- கடந்த 10 ஆண்டுகளில் ஏழை- பணக்காரன் எனும் ஏற்றத்தாழ்வு பலமடங்கு அதிகரித்து இருக்கிறது.
- நாட்டின் செல்வத்தில் 65 சதவீதம் மேல்தட்டு செல்வந்தர்கள் 10 சதவீதம் பேரிடம் இருக்கிறது.
- கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவீதம் மக்களிடம் வெறும் 5.6 சதவீதம் செல்வமே இருக்கிறது.
- நாட்டின் மொத்த வருமானத்தில் 82 சதவீதம் 11 சதவீதம் பேரிடம் செல்கிறது. வெறும் 12.7 சதவீதம்தான் 50 சதவீதம் மக்களுக்குக் கிடைக்கிறது.
- ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதால் ஏழைகள், பரம ஏழைகள் ஆகிறார்கள்.
- பாதுகாப்பு ஏதுமற்றவர்களான அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மிகக் கடும் இன்னலுக்கு ஆளாகின்றனர்.

| | |
|---|---|
| கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் வருமானத்தை 60 சதவீதம் அதிகரித்து இருக்கிறார் மோடி. | ஆனால், 34 சதவீத குடும்பங்கள் நாளொன்றுக்கு ரூ 178க்கும் குறைவான வருமானத்தில் வாழுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். |
| ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்றார் மோடி 2013ல். | நடந்ததோ ஆண்டுக்கு 1 கோடி பேர் வேலை இழப்பு. |
| ஸ்விஸ் பேங்கில் இருக்கும் கருப்புப் பணத்தைப் பறித்து இந்திய மக்கள் வங்கிக் கணக்குக்கு 15 லட்சம் போடுவேன் என்றார். | ஸ்விஸ் பேங்க் வழங்கிய கருப்புப் பண விவரங்களைக் கூட வழங்கவில்லை. ஒரு பைசா கூட கருப்புப் பணம் பறிக்கப்படவில்லை. ஒரு பைசாவும் மக்களின் வங்கிக் கணக்குக்கு வரவில்லை.<br>400 ரூபாய் சிலிண்டர் 1000 ரூபாயாக உயர்ந்ததுதான் மிச்சம். ஒரு பைசாவும் மக்களுக்கு மானியம் இல்லை. |
| விவசாயிகள் வருமானம் இரட்டிப்பாகும் என்றார். | குறைந்தபட்ச ஆதார விலையும் இல்லை. இருக்கும் நிலத்தையும் விவசாயத்தையும் பறிக்கும் சட்டம் மட்டுமே வந்தது. |
| 2018ல் மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லை என்றார். | 3.1 கோடிக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன என்கிறது ஃபோர்ப்ஸ் நிறுவன ஆய்வு. |
| 5 லட்சத்துக்கு அயுஸ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டம் வழங்கியதாக பீற்றிக் கொள்ளப்படுகிறது. | அதில் பல கோடிகள் செத்துப் போன பிணங்கள் பெயரில் செலவு செய்யப்பட்டதாக சொன்ன தலைமை தணிக்கை அதிகாரி அந்த பதவியிலிருந்தே நீக்கப்பட்டார். |

# மோடி நிறைவேற்றிய உத்தரவாதங்கள்

- பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் கட்டி, மதவெறிக்குத் தூபம் போட்டது.
- சட்டப்பிரிவு 370அய் நீக்கி, காஷ்மீர் மக்களுக்கான சிறப்புச் சலுகையை ரத்து செய்தது. காஷ்மீரைத் துண்டாடியது. அதன்மூலம், முஸ்லீம்கள் இரண்டாம்தரக் குடிமக்களே என நிறுவியது.
- சிஏஏ அமுல்படுத்தி, மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்தியது.
- தேர்தல் பத்திரங்கள் மூலம் வெளிப்படைத்தன்மையை ஒழித்தது, மிரட்டிப் பணம் பறிப்பதை, ஊழலை சட்டபூர்வமாக்கியது,
- ”ஒளிரும் இந்தியா” போல மற்றுமொரு வாய்ச்சவடாலாக “வளர்ந்த இந்தியா” எனும் சொல்லாடலை உருவாக்கியது.

**இது மோடியின் “அமிர்த காலம்” அல்ல, ”ஆலகால விஷத்தின் காலம்”**

டிஎம் கிருஷ்ணா



# கலை - இலக்கியத்தில் கலகக் குரல்!

- செந்தில்

கர்நாடக இசைக் கலைஞர் டிஎம் கிருஷ்ணாவிற்கு 2024 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி பட்டம் மியூசிக் அகாடமியால் வழங்கப்பட இருப்பதாக சில நாட்களுக்கு முன்னர் அறிவிப்பு வெளியானது. அவருடைய “ஆற்றல்மிகு குரலுக்கான” அங்கீகரிப்பாக, கர்நாடக இசைக் கலையை “அதன் இறுக்கமான சட்டகங்களுக்குள் வைத்திருப்பதற்கு மாறான பரிசோதனை முயற்சிகளுக்காக”, மேலும், கர்நாடக இசையை “சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக” பயன்படுத்தியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது என மெட்ராஸ் மியூசிக் அகாடமி தலைவர் என் முரளி குறிப்பிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கர்நாடக குரலிசைக் கலைஞர்கள் விதுரசி சகோதரிகளான ரஞ்சனி, காயத்ரி, ஹரிகதை நிகழ்த்து கலைஞர்களான துஷ்யந்த் ஸ்ரீதர், விஷாகா ஹரி உள்ளிட்ட கர்நாடக இசை உலகின் முக்கிய கலைஞர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மேலும் இந்த ஆண்டிற்கான மார்கழி இசைவிழாவில் தாங்கள் பங்கேற்கப் போவதில்லை எனவும் அறிவித்தனர். இந்திய அளவிலும் சர்ச்சை உருவானது. குறிப்பாக வட இந்திய ஆங்கில ஊடகங்கள் டிஎம் கிருஷ்ணா மீது சேற்றை வாரி இறைக்கின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதிய செபாஸ்டியன் அண்ட் சன்ஸ் என்ற புத்தகம் சர்ச்சைக்குரிய கருத்துக்களை கொண்டிருப்பதாகக் கூறி அதன் வெளியீட்டு விழாவிற்கு அளித்திருந்த அனுமதியை கலாக்ஷேத்ரா விலக்கிக் கொண்டது. ‘வேத வாத்தியம்’ எனப்படும் மிருதங்க இசைக் கருவி, கர்நாடக இசையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இதனைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடும் தலித்துகளுக்கும், கர்நாடக இசைக்கலைஞர்களான உயர்சாதி பார்ப்பனர்களுக்கும் இடையிலான பாகுபாடான சாதிய உறவு குறித்து இப்புத்தகம் விரிவாகப் பேசுகிறது. மிருதங்க உருவாக்கக் கலைஞர்களான தலித்துகள் இந்த இசைப் பிரமிடின் (கீழே விரிந்ததாகவும் மேலே கூர்முனையும் கொண்ட கோபுரம் போன்றது பிரமிட்) மிகவும் கீழ் மட்டத்தில் அழுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது கர்நாடக இசை பங்களிப்பு தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது என்பதை, இப்புத்தகத்தின் வாயிலாக டிஎம் கிருஷ்ணா வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், பெசன்ட் நகர் கடற்கரையில் அமைந்துள்ள மீனவர் கிராமமான ஊரூர் ஒல்காட் குப்பத்தில் மார்கழி இசைவிழாவை நடத்தியவர் டிஎம் கிருஷ்ணா. ‘ஷ்வானுபவ’ என்ற மற்றொரு இசைவிழாவின் மூலமாக, முதன்மை கர்நாடக இசைக் கலைஞர்களால் அங்கீகரிக்கப்படாத, பல்வேறு கலை வடிவங்களும் நிகழ்த்தப்படுவதற்கான மேடையை உருவாக்கித் தந்தவர்.

2018 ஆம் ஆண்டு வயலின் இசைக் கலைஞர் லால்குடி ஜெயராமன் அவர்களின் சீடரான சாமுவேல் ஜோசப்-பால் உருவாக்கப்பட்ட ‘இயேசுவின் சங்கம சங்கீதம்’ என்ற இசை நிகழ்ச்சியை நடத்த திட்டமிட்டதற்கு குரலிசை கலைஞர் ஓஎஸ் அருண் மிரட்டப்பட்டார். அதனால் அந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. இந்து அல்லாத கடவுள்களின் புகழ் பாடுவதற்கு கர்நாடக இசை பயன்படுத்தப்படக் கூடாது என சமூக வலைதளங்களில் பெரும் சர்ச்சை கிளம்பியது. இதற்கு எதிராக குரல் கொடுத்த டிஎம் கிருஷ்ணா, இயேசு, அல்லா குறித்த கர்நாடக இசைப் பாடல்களை ஒவ்வொரு மாதமும் வெளியிடுவேன் என அறிவித்தார்.

இப்படியாக, கர்நாடக இசை பார்ப்பன மேட்டுக் குடியினருக்கு மட்டுமே சொந்தமானதல்ல; இந்து மத கடவுளர்களின் புகழ்பாடுவதற்கு மட்டுமே பயன்படுத்தத்தக்கதுமல்ல; கர்நாடக இசையோடு தொடர்புடைய சாதியவாதம் ஒழித்துக் கட்டப்பட வேண்டும் போன்றவற்றிற்காக தொடர்ந்து குரல் கொடுப்பவர், செயலாற்றுபவர் டிஎம் கிருஷ்ணா. ‘பார்ப்பனர்களின் எதிரி’யான பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். ‘சிந்திக்கச் சொல்பவர் பெரியார்’ என பெரியார் குறித்து பாடுகிறவர்; கர்நாடக இசையின் வழியே சமூக மாற்றத்திற்கான கருத்துக்களைப் பாடிவருபவர். எனவேதான் இந்துத்துவ சக்திகளால் டிஎம்

கிருஷ்ணா தீவிரமாக தாக்கப்படுகிறார்.

இத்தகைய தாக்குதல்கள் ஒன்றும் புதிதல்ல. 1930ல் சுயமரியாதை மாநாட்டில் நம்ம பிள்ளைகள் இசை கற்க வேண்டும் என்ற தீர்மானத்தை பெரியார் கொண்டுவந்த போதே பார்ப்பனிய சமூகத்திலிருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்தன. ''இசையை யார் வேண்டுமானாலும் இசைக்கலாம் என்றால் அது சனநாயகப் போக்கிற்கு தீங்கு விளைவிக்கும். கர்நாடக இசை, சாதி மேலாண்மை வலியுறுத்தப்படுவதை காலம் காலமாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறது'' என்றார் செம்மங்குடி சீனிவாச ஐயர். அத்தகைய கருத்தின் தொடர்ச்சிதான் இப்போது நடக்கும் விவாதம் எனலாம். இந்தப் போக்கு மாற்றப்பட வேண்டும். இசை, கலை, இலக்கியங்களை சாதீய, மதச் சட்டகங்களுக்குள் வைத்துப் பூட்டும் முறையை ஒழிப்பதே ஜனநாயகப் போக்கை வலுப்படுத்தும் என்பது தமிழக மரபு.

எதிர்க் கருத்துகளை, மாற்றுக் கருத்துகளை அதிலும் குறிப்பாக மதச்சார்பற்ற, முற்போக்கு, ஜனநாயக கருத்துகளை, அவை எந்தத் தளத்தில் வெளிப்பட்டாலும் அவற்றை நசுக்கி, ஒழித்துக் கட்டிவிட இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் இந்துத்துவ பாசிச சக்திகள் முழுமூச்சாய் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த செயல் திட்டத்தின் வெளிப்பாடு தான் டிஎம் கிருஷ்ணா மீதான இப்போதைய தாக்குதல்.

டிஎம் கிருஷ்ணா மீதான தாக்குதலுக்கு எதிராக மெட்ராஸ் மியூசிக் அகாடமி அவருடன் நிற்கிறது. "கர்நாடக இசையோடு தொடர்புடைய சாதிப் பாகுபாடு ஒழித்துக் கட்டப்பட வேண்டும்'' எனக் குரல் கொடுத்ததற்காகவே டிஎம் கிருஷ்ணா தாக்கப்படுகிறார் என, மீ டூ இயக்க செயற்பாட்டாளர், பாடகி சின்மயி ஆதரவாக குரல் கொடுத்துள்ளார். கர்நாடக இசை வளர்ச்சிக்கு ஆபிரகாம் பண்டிதர் போன்ற பார்ப்பனரல்லாத ஆளுமைகள் பங்களித்திருப்பதை காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஆனந்த் சீனிவாசன் எடுத்துக்காட்டி காயத்ரி, ரஞ்சனி உடன்பிறப்புகளை விமர்சிக்கிறார்.

"அவருடைய முற்போக்கு அரசியல் நிலைப்பாட்டிற்காகவும், தொடர்ந்து ஏழைகளுக்காக குரல் கொடுப்பதற்காகவும் டிஎம் கிருஷ்ணா தாக்கப்படுகிறார்'' என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவருக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளார். இந்துத்துவ வலதுசாரி கருத்துகளை தமிழகம் தடுத்து நிற்கும் என்பதன் வெளிப்பாடாக இவற்றைக் கொள்ளலாம்.

இடதுசாரி, திராவிட மரபுகளின் விளைவாக தமிழ்நாட்டில் வேரூன்றி இருக்கும் முற்போக்கு ஜனநாயக விழுமியங்களை ஒழித்துக் கட்ட சங்கிகள் தொடர்ந்து முயற்சிக்கின்றனர். இந்தப் பின்னணியில் டிஎம் கிருஷ்ணா மீதான தாக்குதலுக்கு எதிராக, இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் உறுதியாக குரல் கொடுக்க வேண்டும். பாசிசம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் சூழலால் ஊக்கமடைந்துள்ள பாசிச கருத்துகள் தமிழகத்தில் வேரூன்றுவதை தடுத்து நிறுத்திட வேண்டும். வர இருக்கிற 2024 மக்களவைத் தேர்தலில் மோடி ஆட்சியை தோற்கடிப்பது இதுபோன்ற பழமைவாத பிற்போக்கு சக்திகளுக்கும் தக்க அடியாக இருக்கும் ■

# களச் செய்திகள்

குளச்சல் வேன் ஆட்டோ தொழிலாளர் - உரிமையாளர் சங்கத் தலைவர்கள் ரு 6500 மாவட்டச் செயலாளர் அந்தோணி முத்துவிடம் தேர்தல் நிதியாக வழங்கினர்



## திருநெல்வேலி மக்களவைத் தொகுதி வேட்பாளர் சந்திப்பு

திருநெல்வேலி மக்களவைத் தொகுதி வேட்பாளர் இராபர்ட் புரூஸ் 27.3.2024 அன்று வேட்பு மனு தாக்கல் செய்த போது இகக(மாலெ) சார்பாக கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் தோழர் சங்கரபாண்டியன் , தோழர் ஜி.ரமேஷ், நெல்லை மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர் ராஜ் ஆகியோருடன் தோழர்கள் கலந்து கொண்டனர்.



## தருமபுரி ஒன்றிய இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு கூட்டம்

26-03-2024 அன்று தருமபுரி ஒன்றிய இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு கூட்டம் நடந்தது. இகக மாலெ சார்பில் மாவட்டச் செயலாளர் மற்றும் மாவட்டக் குழு சார்பாக முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர். இந்தியா கூட்டணி வேட்பாளர் திரு. மணி அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.



## திருச்சி மக்களவைத் தொகுதி வேட்பாளர் சந்திப்பு

இகக மாலெ சார்பில் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, திருச்சி மாவட்டச் செயலாளர் தேசிகன், புதுக்கோட்டை மாவட்டச்செயலாளர் வளத்தான், மாநிலக்குழு உறுப்பினர் ராஜ்குமார் உள்ளிட்ட தோழர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர் திரு. துரை வைகோ அவர்களைச் சந்தித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன..

# போதுமடா சாமி! (வாக்காளர் கருத்து)

**கனகராஜ்**
**ரெடிமிக்ஸ் கான்கிரீட் நிறுவன தொழிலாளி, சென்னை**



மோடி ஆட்சிக்கு வந்த பத்தாண்டுக்கு முன்னாடி இருந்ததவிட கேஸ், பெட்ரோல், டீசல் வெல இப்போ பல மடங்கு அதிகரிச்சிட்டு. அதனால அத்தியாவசிய பொருட்களோட வெலயும் ஏறிப்போய் நடுத்தர மக்கள, சாதாரண மக்களோட வாழ்க்கய ரொம்ப பாதிச்சிருக்கு.
அம்பானிட்டயும் அதானிட்டயும் முன்னாடியே சொல்லிட்டு நாட்டு மக்கள்ட்ட கடைசி நேரத்துல மோடி சொன்ன, 2000 ரூபா தடை செஞ்ச செல்லாப்பண திட்டம், அன்றாடங் காய்ச்சிகளோட தலையில இடிபோல இறங்கிச்சி.
கொரோனா காலத்துல சரியான திட்டம் போடாம நாட்டு மக்களை முடக்கிப் போட்டது, வெளிமாநில தொழிலாளர்கள் ரொம்ப பாதிக்கப்பட்டாங்க. பல லட்சக்கணக்கான ரூபா செலவு பண்ணி கோட், சூட், மேக்கப் போட்டுட்டு ஊர் ஊரா சுத்திட்டு இருக்காரு. அதனால மக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்ல. பார்த்தீங்கன்னா 44 தொழிலாளர் சட்டங்களை நாலு சட்டங்களா மாத்திட்டாங்க. முதலாளிகளுக்கு சலுகை வாரி வழங்குகிறாங்க. தொழிலாளர் மேல அரசாங்கம் தாக்குதல் பயங்கரமா இருக்கு. இந்த பத்தாண்டு மோடி ஆட்சி நடுத்தர, சாதாரண மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடூரமான ஆட்சி. அதனால இந்த மோடி ஆட்சியை 2024 தேர்தல்ல தோற்கடிச்சே ஆகணும்.

**A மாரியம்மாள்**
**பீடித் தொழிலாளர்**
**பேட்டை, திருநெல்வேலி**



தொழிலாளிங்களோட போராட்டத்தால பீடித் தொழிலாளிங்களுக்கு நலவாரியம் உருவாச்சி. தொழிலாளிங்களோட பிள்ளைளுக்கு பெரிய படிப்பு வர படிக்க உதவித்தொக, வீடுகெட்ட மானியம் 1,50,000/- ரூவா, நடமாடுர ஆஸ்பத்திரி, பலகோடி ரூவா செலவுல பெரிய பெரிய வைத்தியம் பாக்குற ஆஸ்பத்திரி இதெல்லாம் இருந்திச்சி. எங்கள மாதிரி சாதாரண ஜனங்களுக்கு பிரயோஜனமா இருந்திச்சி. மோடி ஆட்சிக்கு வந்த பொறவு 2018 ஆம் வருசம் நலநிதி பிடிக்கிறத ரத்து பண்ணிட்டாரு. ஜிஎஸ்டி வரித் திட்டத்த கொண்டு வந்தாரு. அதனால ஏற்கனவே கெடைச்ச பயனெல்லாம் காணாமப் போயிடுச்சி. ஜிஎஸ்டி வரியால அரிசிலேர்ந்து மருந்து மாத்திர, கேசு வெல வரைக்கும், வெலவாசி கூடிக்கிட்டே போவுது. கேசு வாங்கவே 2 வார சம்பளம் போயிரும். தொடர்ந்து கஷ்டப்பட்டுட்டே இருக்குறோம். பொழுதன்னிக்கும் ரேசன் அரிசி தான் பொங்கி சாப்பிடுறோம். மோடி அரசு பீடி கம்பெனிலர்ந்து அம்பானி, அதானி மாரி பெரிய பெரிய கம்பெனிங்களுக்கு தான் ஆதரவாக இருக்கு. மோடி ஆட்சி எங்களுக்கு வேணாம். கண்டிப்பா தோக்கடிப்போம்.

**தினேஷ் குமார் வேணுகோபால், (B.Tech(IT), MBA).**
**மென்பொருள் பொறியாளர், கூடுவாஞ்சேரி, சென்னை**
**மோடியின் ஆட்சி - நாட்டிற்கு, வீட்டிற்கு, உயிருக்கு கேடு..★**



நம் நாட்டின் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டு வருகிறது. இளைஞர்களின் வேலைவாய்ப்பு பறிபோய்விட்டது. நம் நாட்டின் பொருளாதாரம் நாசமாக்கப் பட்டுவிட்டது. வெளியுறவுக் கொள்கை உள்ளிட்ட அனைத்து கொள்கைகளிலும் பாதிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. எனவே மோடியின் ஆட்சி நாட்டிற்கு கேடு..
₹400 முதல் ₹500 வரை இருந்த சமையல் எரிவாயு விலையேற்றம், பெட்ரோல் டீசல் விலையேற்றம், இதனைச் சார்ந்திருக்கும் நம் வீட்டில் உபயோகிக்கும் அன்றாட அடிப்படைத் தேவைப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தாமல், கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்திற்காக மக்களை காவு கொடுக்கும் மோடியின் ஆட்சி வீட்டிற்கு கேடு..
ஆர்எஸ்எஸ் மற்றும் சங்பரிவார்களை ஆதரிக்கும் மோடியின் ஆட்சி, நம் அரசியலமைப்பு கூறும் முக்கிய அம்சங்களான மதநல்லிணக்கம், சகோதரத்துவத்தை குழி தோண்டி புதைக்கிறது. இந்திய மக்களின் மத நம்பிக்கையை சாதகமாக்கி, மதக் கலவரங்களை உண்டாக்கி, சமூக அமைதியைச் சிதைக்கும் மோடியின் ஆட்சி உயிருக்கு கேடு..

**சித்ராதேவி**
**எம்ஏ, தமிழ் இலக்கியம்,**
**அமெரிக்கன் கல்லூரி, மதுரை**



அனைத்து மாணவர்களுக்கும் படித்து முடித்தவுடன் வேலை கிடைக்கும் என மோடி உத்தரவாதம் அளிக்கிறார். ஆனால் ஏற்கனவே உள்ள வேலைகள் காலியாகி கொண்டிருக்கின்றன. பிறகு எப்படி படித்து முடித்த மாணவர்களுக்கு வேலை கிடைக்கும்? புதிய கல்விக் கொள்கையின் மூலமாக இந்துத்துவ கருத்துக்கள் புகுத்தப்படுகின்றன. புதிய கல்விக் கொள்கையினால் மாணவர்களுக்கு எவ்வித பயனும் கிடையாது. மாணவர்களுக்கான ஊக்கத்தொகை வழங்குவதாக மோடி அரசு மார்தட்டிக் கொள்கிறது, ஆனால் இந்த ஊக்கத்தொகை அனைவருக்கும் கிடைப்பதில்லை. மோடி ஆட்சி பற்றிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 100% மாணவர்கள் அவருடைய ஆட்சிக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். மோடி ஆட்சி மாணவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. மோடி ஆட்சியை வர இருக்கிற தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்.

**வள்ளி**
**தூய்மைப் பணியாளர்**
**கோவை**



மோடி பத்து வருசமா ஆட்சியில இருக்காருங்க. ஆனாங்க பாத்தீங்னா எங்கள போல மக்களுக்கு நல்லது எதையுங் செய்யலீங்க. ஏதோ எங்கள போல எழை மக்களுக்கு வீடு கட்டித் தராருன்னு சொல்றாங்க. கேட்டீங்னா ஒரு லச்சங் குடு, ரெண்டு லச்சங் குடுங்குறாங்க. அதுகூட ரொம்ப ஒதுக்குபொறமா இருக்குங்க. ஒரேயொரு கட்லு மட்டுந்தான் போட முடியுங்க். ஒரு சிலருக்கு அது அவங்க கட்சிக்காரங்க வேண்டப்பட்டவுங்களுக்கு தான் கெடைக்குது.
கேஸு வேலை ஏறிக்கிட்டே போவுதுங்க. அதுனால என்ன மாறி பொம்பளங்களுக்கு ரொம்ப கஸ்டமுங்க. மோடியோட ஆட்சியில பாதுகாப்பே இல்லீங்க. ஆட்சிக்கு வந்தா 15 லட்சம் தரேன்னு சொல்லி ஏமாத்தி போட்டாருங்க. ராமர் கோயிலு கட்டி என்ன பிரயோசனங்க. படிச்ச புள்ளங்களுக்கு வேல இல்லியே. இந்த மோடி ஆட்சி எங்களுக்கு வேணாங்க. அவரு இந்தத் தேர்தலுல ஜெயிக்கக் கூடாதுங்க.

**சிகப்பாயி, கூலித்தொழிலாளி,**
**கணபதிபுரம், புதுக்கோட்டை**



ஏழை பாழைகளுக்கு எதிரான ஆட்சி. நூறு நாள் வேலையில் பல மாசமா கூலி கொடுக்கல. பொம்பள ஆளுகதான் நூறுநாள் வேலைய நம்பியிருக்காங்க. அதையும் இந்த மோடி ஆட்சி புடுங்கிடுச்சி! விவசாயிகளுக்கு ரூ 2000 கொடுக்கறதா மோடி சொல்றார். ஆனா எங்க ஊர்ல கொடுத்த பணத்த மிரட்டி திரும்ப புடுங்கிட்டாங்க. இந்த ஆட்சில தமிநாட்டுக்கு ஒண்ணும் பண்ணவே இல்ல. இந்த ஆட்சி திரும்பவும் வரக்கூடாது. எங்க ஊரே மோடிக்கு எதிராகத்தான் ஓட்டு போடுவோம்.

**விஸ்வநாதன், ஆதனூர், தஞ்சை மாவட்டம்**



நான் ஒரு விவசாயி. மோடி அறிவித்த விவசாயிகள் நிதி உதவித் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ 6000/= பெறுகிறேன். இது கடலில் கரைத்த பெருங்காயம். உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருள் விலை பலமடங்கு உயர்ந்துவிட்டன. உரம், பூச்சிமருந்து உற்பத்தி செய்யும் பெரும் முதலாளிகளுக்கு கொள்ளை கொள்ளையாய் மானியம், லாபத்தை அள்ளிக் கொடுக்கும் மோடி விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ 2000 கிள்ளிக் கொடுக்கிறார். அதுவும் அனைத்து விவசாயிகளுக்கும் இல்லை. விஞ்ஞானி சாமிநாதனுக்கு விருது கொடுத்த மோடி, சாமிநாதன் சொன்ன பரிந்துரையை குப்பைத் தொட்டியில் போட்டு மோசடி செய்துவிட்டார். பயிர்காப்பீடு திட்டத்திலும் பெரும் முதலாளிகள்தான் விவசாயிகளை கொள்ளையடிக்கிறார்கள். விவசாயிகளுக்கு மண்ணுகூட மிச்சமில்லை. மோடி ஆட்சியில் விவசாயத்துக்கு, விவசாயிக்கு அழிவுதான்.

**பி.சேகர், இடதுசாரி ஆர்வலர், வளவனூர், விழுப்புரம் மாவட்டம்**



நாட்டை நாசம் செய்து விட்டது. விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் உண்டாக்குவேன் என்று சொன்ன மோடி பல மடங்கு கடனாளியாக்கியதுதான் மிச்சம். ஓராண்டுக்கு மேலாக தலைநகரில் போராடிய விவசாயிகள் 600 க்கு மேற்பட்டவர்கள் சாவுக்கு காரணம் மோடிதான். மோடி ஆட்சி தோற்கடிக்கப்பட வேண்டும். நிச்சயம் விவசாயிகள் மோடியை தண்டிப்பார்கள், தோற்கடிப்பார்கள்.

# களச் செய்திகள்

**புதுக்கோட்டை மாவட்டம் : தேர்தல் தயாரிப்பு ஊழியர் கூட்டம்**

புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் தயாரிப்பு ஊழியர் கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் தயாரிப்பு ஊழியர் கூட்டம் 18-03-'24 அன்று கந்தர்வக்கோட்டையில் நடைபெற்றது.. கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் வீழு வளத்தான் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் கா. ஜோதிவேல் வரவேற்றுப் பேசினார். தீப்பொறி தலையங்க கட்டுரை பிரதிகள் வழங்கப்பட்டு வாசிக்கப்பட்டது. அதன்மீது மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி விளக்க உரையாற்றினார். ஒன்றிய பொறுப்பாளர்கள் தேர்தல் பணிகுறித்து பேசினர்

# டெல்லி ஜே.என்.யூ-வில் சிவப்பு அலை! -

## காவிப் பாசிசத்துக்கோர் சவால்!




ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் (ஜேஎன்யூஎஸ்யூ) தேர்தல்களில் ஒன்றுபட்ட இடது கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. அகில இந்திய மாணவர் கழகத்தின் (ஏஐஎஸ்ஏ) தோழர் தனஞ்செய் ஜேஎன்யூஎஸ்யூ மாணவர் சங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2,598 வாக்குகள் பெற்று 922 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். எஸ்எஃப்ஐ யின் அபிஜித் கோஸ் துணைத் தலைவராகவும், ஒன்றுபட்ட இடது கூட்டணியின் ஆதரவுடன் பாப்சாவின் ப்ரியான்சி ஆர்யா பொதுச் செயலாளராகவும், ஏஐஎஸ்எப் இன் தோழர் சஜித் இணைச் செயலாளராகவும் வென்றனர்.

பிஜேபியின் மாணவர் சங்கத்துக்கு மரண அடி கொடுத்த இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாணவர் தீர்ப்பு. ஜேஎன்யு வளாகத்தை காவிமயமாக்க கனவு கண்ட சங்கிக் கூட்டத்துக்கும் மோடி அரசுக்கும் மாணவர்கள் தக்க பாடம் புகட்டி இருக்கிறார்கள். ஜே என் யூ என்றென்றும் சிவப்பின் கோட்டைதான் என உணர்த்தி இருக்கிறார்கள். இந்த வெற்றிக்காக, இந்த தேர்தலுக்காக 4 ஆண்டுகளாக மாணவர்கள் எதிர்கொண்ட தாக்குதல்களும், நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் எண்ணற்றவை. இந்த வெற்றி இந்த நாட்டின் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். மோடி தலைமையிலான ஆட்சியை ஒட்டுமொத்தமாக நிராகரித்த வெற்றியாகும்.

பொதுச் செயலாளராக போட்டியிட்ட இடதுசாரி வேட்பாளரின் வேட்புமனு கடைசி நேரத்தில் நிராகரிக்கப்பட்டதால் ஏபிவிபி-ஐ தோற்கடிப்பதற்காக பாப்சா வேட்பாளர் பிரியான்சியை ஆதரித்தனர் இடதுசாரிகள்.

நான்கு ஆண்டுகளுக்கு பிறகு, பல போராட்டங்களினூடாக நடந்த தேர்தல். வளாக ஜனநாயகத்தை நிலைநாட்டும் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது. எனவே, வளாகம் முழுவதும், தேர்தல் முழுவதும் ஜனநாயக வேட்கை கொந்தளித்தது. ஏபிவிபியும் ஜேஎன்யூ நிர்வாகமும் சேர்ந்து நடத்திய அனைத்து விதமான தாக்குதல்களையும், தடைகளையும் மீறிப் பெற்ற வெற்றி இது.

சிறப்பு பொதுப் பேரவை கூட்டத்தின் போது வளாகத்தினுள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டது ஏபிவிபி. மாணவர்களுக்கான துறைத் தலைவரை அவரது அலுவலகத்தில் பணயக் கைதியாக்கியது. இடது கூட்டணியை முடக்குவதற்காக பொதுச்செயலாளரின் வேட்பு மனுவை ரத்து செய்தனர். திட்டமிட்டு சச்சரவுகளை ஏற்படுத்தி, தலைவர் வேட்பாளர் விவாதத்தில் இடையூறு செய்தனர். ரன்வீர் சேனாவை வளாகத்திற்குள் கொண்டு வந்து பிரம்மேஸ்வர் முக்கியாவைக் கொண்டாடினர். 'பஸ்தர்: நக்சல் கதை' யை திரையிட்டனர்; தேர்தல் பரப்புரை இயக்கத்தின் போது எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு விதிகளையும் மீறினர். இத்தகைய பிரிவினைவாத, மாணவர் விரோத சக்திகளின் அட்டகாசத்துக்கு எதிராக மாணவர்கள் ஒன்றுபட்டு எழுந்து நின்றனர். விவாதங்களை, விமர்சனபூர்வமான சிந்தனை முறையை, வளாக ஜனநாயகத்தைப் பேணி வளர்க்கும் ஒரு ஜேஎன்யூஎஸ்யூ-வைத் தேர்ந்தெடுத்தனர்.

தலைவராக வென்ற தோழர் தனஞ்சய், இது மோடி அரசாங்கம் மீதான பொது வாக்கெடுப்பு என்று கூறினார். தெற்கு பீகாரின் நிலமற்ற தலித் கூலித் தொழிலாளர்களின் குரலாக நான் இங்கே நிற்கிறேன்; ரன்வீர் சேனாவின் கொடூரமான வெகுமக்கள் படுகொலையை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்திற்கு எதிராக துணிச்சலுடன் தொடர்ந்து போராடினார்கள். நான் தோழர் மனோஜ் மன்சிலின் குரலாக இங்கே நிற்கிறேன். அவர் சிபிஐஎம்எல் கட்சியின் தலித் இளைஞர் தலைவராவார். பீகாரின் நிலப்பிரபுத்துவ பாசிச அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். உங்களது சிறைச்சாலைகளால் எங்களது குரல்வளையை நசுக்க முடியாது என இன்றைய பாசிச அரசாங்கத்திற்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் எங்களது குரல்களை எழுப்புவோம்; நீதிக்காக போராடுவோம் என தோழர் தனஞ்சய் கூறினார் ■



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.03.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இந்தியா
## ஆதரவு பெற்ற
# சிபிஐ (எம் எல்)
## லிபரேசன்
## வேட்பாளர்கள்

**நாடாளுமன்றத் தேர்தல் & சட்டமன்ற இடைத் தேர்தல்கள்**
**பீகார் - ஜார்க்கண்ட்**
**2024**

**தேர்தல் சின்னம்: மூன்று நட்சத்திர கொடி**

## தோழர்கள்

**ராஜாராம் சிங்**
காராக்கட் மக்களவைத் தொகுதி
- பீகார்



**சுதாமா பிரசாத்**
அரா மக்களவைத் தொகுதி
- பீகார்



**சந்தீப் சவுரவ்**
நாலந்தா மக்களவைத் தொகுதி
- பீகார்



**வினோத் சிங்**
கோடர்மா மக்களவைத் தொகுதி
- ஜார்க்கண்ட்



**சிவ் பிரகாஷ் ரஞ்சன்**
ஏகியான் சட்டமன்றத் தொகுதி
- பீகார்



ஜனநாயகம் காப்போம்!
அரசமைப்புச் சட்டம் காப்போம்!
பிஜேபியைத் தோற்கடிப்போம்!



**ஜனநாயகம் காப்போம்! எனும் முழக்கத்துடன், கேஜிரிவால், சோரன், மனோஜ் மன்சிலை விடுதலை செய்யக் கோரி டெல்லியில் மார்ச் 31 நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மாபெரும் பேரணியில், சிபிஐஎம்எல் பொதுச்செயலாளர் தோழர் திபங்கர் உரை**

Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh